# இயேசு தம்முடைய எல்லா சந்திப்புத் திட்டங்களையும் காத்துக்கொள்கின்றார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-04-18E, **இயேசு தம்முடைய எல்லா சந்திப்புத் திட்டங்களையும் காத்துக்கொள்கின்றார்**, பாரா 31 முதல் பாரா 172 வரை

இப்பொழுது பரி.லூக்கா 7வது அதிகாரம், 36 ஆம் வசனம் ;

**... பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்.**

**அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து,**

ஒரு பரணியில் பரிமளத்தைலம் கொண்டு வந்து,

அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளத் தைலத்தைப் பூசினாள்.

அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும், இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே

**சொல்லிக் கொண்டான்** (நினைவில் கொள்ளுங்கள், சத்தமாக அல்ல; தனக்குள்ளாக)

**இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும் என்றார். அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான்.**

**அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது.**

**கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக**

அன்பாயிருப்பான்? அதைச்சொல் என்றார்.

சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி,

ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்.

நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள்.

நீ என் தலையில் எண்ணெய் பூச வில்லை, இவளோ, என் பாதங்களில் பரிமள தைலம் பூசினாள்.

ஆதலால் நான் உனக்குச் சொல்லு கிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி;

**அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.**

**அப்பொழுது கூடப்பந்தியிருந்தவர்கள்; பாவங்களை மன்னிக்கிற இவன் யார்? என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.**

**அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.**

32. நாம் ஜெபிப்போமாக.

33. கர்த்தராகிய இயேசுவே, இந்த சம்பவமானது அநேக வருடங்களுக்கு முன்னாக நிகழ்ந்த ஒன்றாகும். இது ஒரு உண்மையான சம்பவமாகும் ; ஏனென்றால் இது எங்களுடைய வேதாகமத்தின் பக்கங்

களில் எழுதப்பட்டுள்ளது - ஆகவே அது உண்மையான ஒன்று எங்களுக்குத் தெரியும். ஆகவே இப்பொழுது இதை மறுபடியுமாக இன்றிரவு விளக்கமாக வர்ணிக்க நாங்கள் முயற்சி செய்யவில்லை, ஆனால் இதை இன்றிரவு மக்களுக்கு ஒரு செய்தியாக நாங்கள் அளிக்க உதவி செய்யும்; அதினாலே அவர்கள் தாமே நீர் இன்னுமாக அதே கர்த்தராகிய இயேசுவாக இருக்கின்றீர் என்பதை அறிந்துகொள்ள ஏதுவாக இருக்கும் படிக்குச் செய்யும். நாங்கள் தேவைகள் உள்ள மக்களாக இருக்கின்றபடியால் நீர் தாமே உம்முடைய ஆசீர்வாதங்களை எங்கள் மீது இருக்கும்படியாக ஜெபிக்கின்றோம். கர்த் தாவே, நீர் எங்களுக்கு தேவையாயிருக்கிறீர்.

34 இன்றிரவு நாங்கள் விசுவாசிக் கின்றோம், நீர் குருடர் பார்வையடையச் செய்வதையும், செவிடர் கேட்கும்படிச் செய் கிறதையும், சப்பாணிகள் நடக்கும்படிக்குச்

செய்கிறதையும் மருத்துவர்களின் அறிக்கையின்படியே வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு சமயங்களில் மரித்துப் போயிருந்த ஐந்து பேர்களை உயிரோடெழுப்பினதையும் நாங்கள் கண்டாலும்... ஆனாலும் கர்த்தாவே, எனக்குத் தெரிந்த வரைக்கும் இன்றிரவு மிகவும் வியாதிப்பட்டிருக்கின்ற காரியமானது என்னவென்றால், பூமியிலே இருக்கும் சபையாகிய கிறிஸ்துவின் சரீரமே. அது மிகவுமாக வியாதிப்பட்டுள்ளது.

கர்த்தாவே இன்றிரவு அதை சுகப்படுத்தும். இங்கே உட்கார்ந்திருக்கின்ற இந்த பாகமானது - இங்கே டாம்பாவில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற இந்த கூட்டமானது, இந்த அருமையான மக்கள் கூட்டமானது -- கர்த்தாவே, இன்றிரவு ஒவ்வொரு காயத்தையும் சுகமாக்கும். ஆவியானவர் தாமே இதை எங்களுக்கு அருளட்டும், இதை நாங்கள் இயேசுவின் நாமத்தில், அவருடைய

கனத்துக்கும், இங்கே நாங்கள் பிரயாணப் பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நகரத்தில் அவருடைய மகிமைக்கும் கேட்கின்றோம். ஆமென். நீங்கள் உட்காரலாம். அதை நான் இப்பொழுது சில நிமிடங்களுக்கு அதை அழைத்தால்... ஒவ்வொரு இரவும் அவ் வாறே செய்ய நான் முயற்சிக்க வேண் டாம்.....

36 உங்களிடம் நான் மன்னிப்பு கேட்க வேண்டியவனாக இருக்கின்றேன், ஏனென் றால் நீங்கள் மிக அருமையாக இருந்தீர்கள், ஆகவே நான் ..... பிரசங்கத்தை எப்பொழுது நிறுத்த வேண்டும் என்று கூட தெரியாமல், பிரசங்கிப்பதற்கென நீங்கள் மிக அருமை யான ஒரு ஜனக்கூட்டமாகும். அவ்விதமாக இருப்பது எதைச் செய்கிறதென்றால் நான் கூறுகின்ற வார்த்தைகளை நீங்கள் ஆகாரமாக உண்கிறீர்கள் அல்லது பெற்றுக் கொள்கி

றீர்கள் என்பதை ஒரு ஊழியக்காரன் அறிந்து கொள்வதே.

37 நான் உங்களிடமாக வந்த போது .... நான் வந்த போது நான் மிகவும் சோர்ந்து களைத்துப்போனவன். பாருங்கள், கிறிஸ்துமஸ் முதற்கொண்டு நான் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

இங்கிருந்து நேராக நான் மறுபடியும் ஆரம்பிக்கத்தக்கதாக டூஸ்ஸானுக்குச் செல்கிறேன்.

38 அங்கிருந்து நேராக வந்து, கடந்த இலையுதிர்க்காலத்தில் வேட்டைப் பயணத்தில் நான் சென்றிருந்த போது கிறிஸ்துவினிடம் நான் வழிநடத்தின ஒரு செவ்விந்தியர் மரபினரின் முழு கூட்டத்திற்கும் நான் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு செல்ல

வேண்டும் -- முன்னர் அவர்கள் கத்தோலிக்கர்களாக இருந்தனர். அவர்களிடையே இருந்த ஒரு தாயார் சுகமாக்கப்பட்டதினாலே அந்த முழு மரபினக் குழுவும் தங்கள் இருதயத்தை கிறிஸ்துவுக்கு அளித்தனர், மருத்துவர்களால் அந்தத் தாயை... யாராலும் அவளைத் தொடக்கூட முடியவில்லை. அவள் படுத்திருந்து மரித்துக்கொண்டிருந்தாள். பனி உருக ஆரம்பித்த உடனே நான் திரும்பி வரவேண்டுமென்று அவர்கள் விரும்பினர். பாருங்கள், அங்கே சீதோஷ்ணமானது பூஜ்ஜியத்திற்கு கீழே மைனஸ் எண்பத்தைந்திற்கு சென்று விடுகிறது. அதன்பிறகு, பனி உருகியது, ஆதலால் நான் எல்லாரையும் அங்கே அழைத்துச் செல்கிறேன், மற்றும் எல்லாரும்...

39 அலாஸ்கா நெடுஞ்சாலையின் மேலும் கீழும் உள்ள ஒரு பெரிய கூட்ட வேட்டையாடுபவர்கள் மிருகங்களைப் பொறி

வைத்துப்பிடிப்பவர்கள் ஆகியோர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள எல்லாரும் என்னுடன் கூடுகின்றார்கள். ஒரு குறிப்பிட்ட கரடி எங்கே இருக்கும் என்றும், அதன் எடை எவ்வளவு இருக்கும் என்றும், அந்த மிருகம் எங்கே தங்கும் என்றும் அங்கே யார் இருப்பார்கள் என்றும், அவர்கள் என்ன அணிந்திருப்பார் கள் என்றும் அதைக்குறித்த ஒரு குறிப்பிட்ட தரிசனத்தைக் கர்த்தர் காண்பித்ததை அவர்கள் கண்டனர். அது சம்பவிக்கும் முன்னரே அதைக்குறித்துக் கூறினேன். அதற்கு அவர் கள், "அது .... இந்த பிரதேசத்தில் அந்த வித மான காரியமானது கிடையவே கிடையாதே" என்றனர். ஆகவே நாங்கள் நேராக அத னிடத்திற்குச் சென்றோம். அது வார்த்தைக்கு வார்த்தை அப்படியே சம்பவித்தது. என் அறையில் அவை வேட்டைப் பரிசுகளாக இன்றைக்கும் தொங்கிக்கொண்டிருக்கிறது,

பாருங்கள். அவர்கள், "நாங்களும் கூட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விரும்பு கிறோம்” என்றனர். அவர்கள் மிகவும் கரடு முரடான மனிதர் என்பது உங்களுக்குத் தெரியும், எல்லாவிடங்களிலும் அவர் வித்துக் களைக் கொண்டுள்ளார்.

40 இன்றிரவிற்கான என்னுடைய பொருள் "இயேசு தம்முடைய எல்லா சந்திப்புதிட்டங்களையும் காத்துக் கொள்கின் றார்” என்பதேயாகும். நாம் அதைக் குறித்துப் பேசுகையில் அதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் நீண்ட நேரம் பேசமாட்டேன். இப்பொழுது, நீங்கள் அதைக் குறித்து சற்று சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகவே நினைவில் கொள்ளுங்கள், இன்றிரவு நம்மிடையே பிரசன்னமாக இருக்கின்ற இந்த ஒன்றை நீங்கள் என்றாவது ஒரு நாளிலே சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

41 இப்பொழுது, இன்றிரவு நம்முடைய காட்சியமைப்பில் சூரியனானது ஏறக்குறைய மறைந்திருக்கலாம். சூரியன் மறைகின்ற ஒரு நேரமாயிருந்தது. இந்த செய்தி கொண்டு செல்பவன் நாள் முழுவதுமாக - ஒருக்கால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஓடிக்கொண்டிருந்திருப்பான். அவன் இயேசுவை கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். அவர் சென்று கொண்டே இருந்தார், ஒருக்கால், ஏறக்குறைய தான் முதல் பெயர்செபா வரைக்குமாக பிரயாணம் செய்திருப்பார்.

42 இயேசு தம்முடைய ஊழியத்தில் சென்றுகொண்டே ..... தம்முடைய அற்புதங் களை அதிசயங்களையும் செய்வதற்கும், எல்லா மக்களும் ஒன்று கூடும் இடத்தில் இங்கே பேசவுமேபிறகு அங்கிருந்து வேறெங் காவது ஒரு இடத்திற்கு செல்ல புறப்பட்டு

விடுவார். ''நான் இன்னொரு பட்டினத்திற்கு செல்ல வேண்டும்” என்று சென்றுவிடுவார்.

43 அவருக்குக் கடினமான ஒரு நேரமாக இருந்தது. ஒருக்கால் அவர் கப்பர்நகூமிற்குச் சென்றுவிட்டிருப்பார், அவர்கள், ''என்ன, அவர் இந்த இடத்தை விட்டுச்சென்று ஒரு வாரம் ஆகிவிட்டதே. அவர் சரியாக எங்கே சென்றார் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் எங்கோ ஓரிடத்திற்கு அவர் சென்றிருப்பார்,” என்று கூறினர். ஆகவே அவர் .... ஓ, அவர் மிகவும் களைத்துப் போயிருந்தார். அவருடைய தலை மயிரானது வேர்வையினால் ஈரமாக இருந்தது. அந்த செய்தி கொண்டு செல்பவன் இயேசு பேசிக்கொண்டிருந்த குழுவிற்குள்ளாக வந்து நின்றான்.

44 அங்கே இயேசுவும் கூட மிகவும் களைத்துப் போயிருந்தார். நாள் முழுவதுமாக

அவர் பேசிக் கொண்டிருந்தார். அதிகமாக அவர் பேசியிருந்ததால் அவருடைய வாய் உலர்ந்து போயிருந்தது. அவருடைய கைகள் சற்று வெலவெலுத்த நிலையில் காணப் பட்டது. சூரியன் மறைய ஆரம்பித்த அந்த நேரத்தில் அவருடைய கண்கள் மிகவுமாக சோர்ந்து போன நிலையில் இருந்தது.

அவன் இயேசுவைக் காண விரும்பி னான். அவன் அவருக்கு ஒரு செய்தியைக் கொண்டு வந்திருந்தான்.

45 அங்கே இயேசு தன்னைச் சுற்றிலும் பன்னிரண்டு மனிதரைக் கொண்டிருந்தார், அவர்கள் மக்களை அவரிடமிருந்து சற்று தூரமாக வைத்திருந்தனர், ஏனென்றால் அப்படியில்லையென்றால் மக்கள் கூட்டம் முழுவதுமாக வந்து அவரை நெருக்கி அவர் மீது விழுவர். ஆகவே அவர்கள் .... (எல்லோரும் புரிந்து கொள்ளும் விதமாக

நான் இதை ஒரு நாடக அமைப்பில் அமைந்துள்ளேன்) ஆகவே இங்கே இயேசுவின் மனிதரை நாம் பார்க்கையில்..... செய்தி கொண்டு வருபவன் அந்தக் கூட்டத் திற்குள்ளாக வந்திருப்பான், அவன் பிலிப் பிடம் வந்திருப்பான். அப்போது பிலிப்பு இப்படியாகக் கூறியிருப்பான், “ஐயா (அவன் ஒரு வாலிபன்), போதகரை சந்திக்கும்படிக்கு உங்களை அனுமதிப்பதில் நிச்சயமாக எங்க ளுக்கு விருப்பம் தான், ஆனால் அவர் மிகவும் களைத்துப் போயிருக்கின்றார். நாங்கள் அவரை கவனித்துக்கொள்ள வேண் டியவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் அவர் சோர்ந்து கீழே விழும் வரைக்கும் பேசிக்கொண்டே இருக்கின்றார். நிறைய கூட் டங்களை நாங்கள் முடித்து வந்துள்ளோம், சமீபத்தில்..... என்னை மன்னியுங்கள், அவரை சந்திக்க அனுமதி அளிக்க முடியாது என்று நான் நினைக்கின்றேன்” என்றான்.

46 அதற்கு அந்த செய்தி கொண்டு செல்பவன், "மத சம்பந்தமான அதிகார மட்டத்திலிருக்கும் ஒரு மிக முக்கியமான நபரிடமிருந்து ஒரு குறிப்பை நான் கொண்டு வந்துள்ளேன். அது உங்கள் போதகருக்கான ஒரு அழைப்பாகும். ஏனென்றால் இந்தக் குறிப்பை நான் தனிப்பட்ட விதத்தில் அவரிடமாக அளித்து அந்தக்குறிப்பை அவர் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக் கொள்ளச் செய்வதே எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் கட்டளையாகும்” என்று கூறினான்.

47 ஆகவே அதற்கு பிறகு தான் அவனை கர்த்தராகிய இயேசுவிடமாகக் கொண்டு சென்றார்கள். கர்த்தராகிய இயேசு அவனைப் பார்த்துக் கொண்டிருக்கையில் - ஒருக்கால் அவர் பேசிக்கொண்டிருந்த பிரசங்கப் பீடத்திலிருந்து வந்து கொண்டிருக்கலாம், அவர் பேசத்தக்கதாக சீஷர்கள் அந்த பிரசங்க பீடத்தை அமைத்திருந்தனர் - அவர் பார்த்துக்

கொண்டிருந்த போது, ஆம் அவர் அந்த வாலிபனைப்பார்த்துக் - கொண்டிருந்தார். அவனை அவருக்குப் பிடித்திருக்கும்.

48. அந்த வாலிபன் அவரிடமாக, "ஐயா நான் ஒரு தூதைக் கொண்டு வந்துள்ளேன். இன்னின்ன நகரத்தில் உள்ள ஒரு மிகப்பெரிய அந்தஸ்தில் உள்ள ஒரு மனிதன் இருக்கின்றார். அவர் ஒரு பரிசேயர் ஆவார், மதங்களிலே மிகவும், கண்டிப்பானதாகிய பரிசேயரைச் சேர்ந்தவர். அவர் ஒரு இரவு ஆகாரத்தை - ஒரு அருமையான ஒரு தருணத்தை, ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தி யிருக்கின்றார் - நீங்கள் ஒரு சிறப்பு விருந்தினராக அதில் கலந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆகவே அவர்... அந்த விருந்தில் கலந்து கொள்ள அநேகர் விரும்புகின்றனர், ஆனால் நீங்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று அவர் உங்களைத் தேர்வு செய்துள்ளார்.

மூன்று நாட்களாக இந்த பிரதேசம் முழுவதுமாக உங்களைக் கண்டுபிடிக்க முயன்றுக் கொண்டிருக்கிறேன். இங்கே உங்களை சந்திக்கும்படிக்கு நான் நிச்சயம் மகிழ்ச்சி கொள்கிறேன், ஐயா, இதோ, அவரிடத்திலிருந்து வரும் இந்த அழைப்பின் குறிப்பை உங்களிடமாக அளிக்கின்றேன்" என்று கூறினான். ,

49 அப்பொழுது அவர் அந்த குறிப்பை எடுத்து அதை வாசித்தார். ஆகவே இந்த குறிப்பிட்ட பரிசேயன் ஒரு பெரிய விருந்தை நடத்தவிருக்கின்றான் என்றும் அந்த விருந்திற்கு அவர் வந்து அவனுடனே ஒரு சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள அவருக்கு அழைப்பு விடுத்தான் என்று நாம் காண்கின்றோம். ஆகவே இயேசு சில நிமிடங்களுக்கு நின்று அந்த வாலிபனைப் பார்த்துக்கொண்டிருந்தார்....

50 அவருக்கு நேரமேயில்லாமல் எப்போதும் போல ஓயாமல் பணியில் இருந்தார், நீங்கள் அவருக்கு அழைப்பே கொடுக்க முடியாது. அவர் தீர்மானிக்கிறபடியே அவர் வருவார். சூழ்நிலை என்னவாயிருந்தாலும் சரி, அது ஒரு பொருட்டல்ல, அவர் வருவார்.

51 "நான் அங்கே வருவேன் என்று நீ போய் உன் எஜமானனுக்கு சொல். ஒரு குறிப்பிட்ட நாளிலே, ஒரு குறிப்பிட்ட சமயத்திலே நான் அங்கே இருப்பேன் என்று கூறு" என்று அவர் கூறினார்.

52. அப்பொழுது அந்த செய்தி கொண்டு செல்லும் பணி செய்பவன் புன்னகை செய்து திருப்தியடைந்தவனாக திரும்பிச் சென்று, தன் எஜமான் யாரிடமாக இந்தச் செய்தியை அளிக்க விரும்பினானோ அதை அந்த நபரிடம் வெற்றிகரமாக அந்த செய்தியை அளித்துவிட்ட, அந்த நல்ல செய்தியை தன்

எஜமானனுக்கு அறிவிக்க மலையின் கீழ் நோக்கி ஓடத் துவங்கினான்.

53. செய்தி கொண்டு சென்று கொடுக்கும் பணி செய்பவனைக் குறித்து என்ன? எப்படியாக அவனுடைய காரியமாக இருந்தது? அவன் என்ன செய்தான் என்பதை தெரிந்து தான் செய்தானா? ஒருக்கால் தன்னுடைய வாழ்க்கையிலே முதல் முறை யாக இயேசுவினுடய பிரசன்னத்தில் நின் றிருப்பான், ஆனால் அவன் தன்னுடைய பாவங்களுக்காக மன்னிப்பைக் கூட கேட்கவேயில்லை. அந்த தருணத்தை அவன் உபயோகப்படுத்தவில்லை.

54. ஓ, இன்றைக்கும் ஜனங்களிடமாக அதே விதமாகத்தான் இருக்கின்றது. அநேக முறை அவருடைய பிரசன்னத்தில் இருக் கிறோம் என்பதை உணர்கின்றார்கள். ஆனால் மன்னிப்பு கேட்பதே கிடையாது.

55. ஆம் அது .... ஒருக்கால் அவனுக்கு இன்னொரு தடவை அந்த தருணமானது அளிக்கப்படாது; மன்னிப்புக் கேட்க அவனுக்கு அளிக்கப்பட்ட கடைசி தருணத்தை அவன் மறுத்து விட்டான். எப்படி அவ்விதமாக அவன் செய்திருக்க முடியும்? இந்த ஆள் அந்த செய்தியைக் கொண்டு வந்த போது அவன் காரியத்தைக் காணாதபடிக்கு மிகவுமாக அவன் சுற்றிலும் போர்த்தப் பட்டிருந்தான், அதினாலே அவன் தேவனுடைய குமாரனுடய பிரசன்னத்தில் இருந்து மன்னிப்பு கேட்க தவறிவிட்டனால்லவா, அது எல்லாம் ஒரு வணிகப் பிரகாரமாகவே நடத்தப்பட்டது.

56. ஆகவே உங்களுக்குத் தெரியுமா, இன்றைக்கு உள்ள ஜனங்களைப் போலவே தான் அது இருக்கின்றது. சபை ..... கிறிஸ்து வணிகப்பிரகாரமான ஒரு காரியமாக ஆகிவிட்டார் அல்லது சபையைச் சேர்ந்து

கொள்வதானது ஒரு சமூகப் பிரகாரமான காரியமாக ஆகிவிட்டது, அப்படிச் செய்வ தானது இன்னும் சிறிது அதிக சமூக அந்தஸ்தை அல்லது அதைப்போன்றதை அளிக்கின்றது. உங்கள் அக்கம்பக்கத்தினர் மத்தியில் நீங்கள் அந்தஸ்தில் சற்று உயர் கின்றீர்கள். ஒரு பாவி செய்யவேண்டியதைப் போலவே உண்மையாகவே வந்து மனந் திரும்புவதானது இல்லவேயில்லை. சபை களில் அநேக முறை மக்கள் சரியாக கிறிஸ்துவின் பிரசன்னத்தில் கொண்டு வரப்படுகின்றனர், பிறகு அவர்கள் திரும்பச் சென்று இந்த, செய்தி கொண்டு வரும் பணி செய்கிறவன் செய்தது போலவே அவர்கள் காரியத்தைச் செய்துவிடுகின்றனர்.

57. ஓ, அவன் தன்னுடைய முழங் காலிலே விழுந்து..... அவர் யார் என்பதை அறிந்த உடனே அவன், “போதகரே, நான் உங்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டு

வந்துள்ளேன். ஆனால் முதலாவதாக நீர் என்னை மன்னிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்” என்று கூறியிருப்பானா னால், அந்த விதமான அணுகுமுறையானது ஒரு சரியான ஒன்றாக இருந்திருக்கும். அதற்குப்பிறகு செய்யத்தக்கதாக வேறே வேலை இருக்குமானால் அதை பிற்பாடு செய்திருக்கலாம். ஆகவே முதலாவதாக அவன் தன்னுடைய ஆத்துமாவை தேவ னுடனே. சரி செய்ய வேண்டும்.

58 அதன் காரணமாகத்தான் மிக அதிக அளவில் சுகமளித்தலானது அல்லது சுக மளித்தல் என்று கூறப்படும் காரியமானது தோல்வியில் முடிகின்றது. ஏனென்றால் முதலாவதாக மக்கள் சுகமளித்தலுக்கே தயாராக இல்லை; அவர்கள் தங்கள் தவறுகளை அறிக்கை செய்யமாட்டார்கள். ''உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர்

ஜெபம்பண்ணுங்கள்” என்று வேதம் கூறுகின்றது. ஆகவே அதைச் செய்வதற்கு நமக்கு விருப்பமில்லை. சுகமளித்தலை எடுத்து முன்னே சென்று பிறகு பின்னே சென்று நாம் செய்து கொண்டிருந்ததை செய்வோமானால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் முதலாவதாக, உண்மையாக வந்து தேவனுடன் தங்களைச் சரி செய்துக் கொள்வது என்பதான காரிய மானது, அதைச் செய்ய மக்களுக்கு விருப்பம் கிடையாது. அதனால் தான் மக்கள் அநேகர் அதே நிலையில் நடந்து வந்து அதே விதமாகவே திரும்பிச் செல்கிறார்கள், அவர் கள் சுகமடைவதில்லை. அந்த எல்லா காரி யங்களைக் குறித்தும் தேவனுக்குத் தெரியும்.

59. இப்பொழுது, செய்தி கொண்டு செல்லும் வேலை செய்யும் இந்த ஆள் ஒரு மிக அருமையான காரியத்தைச் செய்தான் என்று நாம் நினைக்கலாம். "அவனுடைய

இடத்தில் நான் மாத்திரம் இருந்திருப்பே னானால்! நான் மாத்திரம் அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாகச் சென்று அவ ருக்கென ஒரு செய்தியைக் கொண்டு சென்றிருந்தால், முதலாவதாக நான் செய்வது என்னவென்றால் ……” என்று நாம் நினைக் கலாம். நீங்கள் என்ன செய்வீர்கள்? அங்கு சென்று அதைக் குறித்து என்ன கண்டறிய வேண்டும் என்று உங்கள் ஸ்தாபனம் கூறியிருப்பதைக் குறித்து தான் நீங்கள் அக்கறை செலுத்துவீர்கள் அல்லவா? அல்லது பரலோகம் எப்படி அலங்கரிக்கப் பட்டுள்ளது என்று காண நீங்கள் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருப்பீர்களா? அல்லது அவருடைய சமூகத்தில் நீங்கள் கூறுகின்ற முதல் காரியமானது, “தேவனாகிய கர்த் தாவே, பாவியாக என்னை மன்னியும்” என்று இருக்குமா. நீங்கள் செய்யவேண்டிய சரியான காரியமாக அது இருக்கும்.

60. இப்பொழுது, அந்த நபர் வந்து திரும்பிச் செல்கையில் இயேசு அவனை கவனிக்கையில், இந்த விதமாக அவருடைய மனதில் தோன்றியிருக்கும் .... "ஏன் அந்த பையன் அந்த விதமாகச் செய்யவில்லை?" அவன் யாரைச் சந்தித்தான் என்பதை கவ னிக்காததினாலா?

61. இதை நான் கூறுவேனாக - அவபக்தி யானதாக அல்ல - இதை நான் கூறட்டுமா? இந்த கூட்டத்தில் அல்லது வேறெந்த கூட்டத்தில் நடப்பதினால் அல்ல, ஆனால் நான் நினைப்பது என்னவென்றால் இன் றைக்கு காரியமானது அப்படித்தான் இருக் கின்றது, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றறிகிற உணர்வுநிலை மக்களுக்கு இல்லை, வேதாகமமானது சரியாக அடை யாளம் காட்டப்படுவதை அவர்கள் காண் கின்றனர். அது யாராக இருக்கிறது என்று அறிந்துகொள்கின்ற உணர்வு நிலை

அவர்களுக்கு இல்லை. அவர்கள் ஒன்றைக் கண்டு, “ஓ, அது மிகவும் அற்புதமானது, அது மிக அருமையான ஒன்றாகும். நான்..." என்று கூறுவார்கள். ஆனால் அது என்னவா யிருக்கிறது என்று அறிகின்ற உணர்வு நிலையில் நீங்கள் இல்லை. அப்படி அறிகின்றதான காரியமாக இருக்குமானால், மனந்திரும்புதலானது நடந்து கொண் டிருக்கும், மக்கள் அழுது கொண்டும், கதறிக் கொண்டும் இருப்பார்கள். நகரத்தில் இரு பெரும் எழுப்புதல் உண்டாயிருந்தது உங் களில் பாதிப்பேர் காலைப்பொழுதிற்கு முன்னதாகவே தாழ்ப்பாளிடப்பட்டிருப் பீர்கள். அது சரியே, அது என்ன என்பதைக் குறித்ததான உணர்வு நிலையானது நமக்கு இருக்குமானால், ஆனால் நாம் அநேக முறைகள் கடந்து சென்று, அதைக்குறித்த உணர்வு நிலை நமக்கு இல்லாதிருப்பதால் அதைக் காணத் தவறுகிறோம்.

62. அந்தப் பையன் அதை உண்மையாகவே உணர்ந்திருக்க மாட்டான் என்று நான் நினைக்கிறேன். அந்த மகத்தான நிர்வாகியாகவும், இளவரசனாகவும் அல்லது மிக பக்தியான மனிதனாகிய இந்த பரிசேயன் மத்தியில் அவன் வளர்க்கப் பட்டிருந்தான். அவன் அந்த பரிசேயனுடன் வளர்க்கப் பட்டபடியால் அவன் அந்த மதத்தின் பட்சயமாகவே சார்ந்திருந்தான். அந்த பரி சேயன் இயேசுவைப் பார்த்து நகைத்து அவரைக் குறித்து பரியாசம் செய்தான் அல்லது அவர்கள் செய்த விதமாகவே அவனும் செய்தான், அந்நாளிலே அவர்கள் அவ்விதமாகச் செய்தனர். அவன் அந்த தகவலை வெறுமனே போட்டுவிட்டுச் சென் றான். அது அவன் கொண்டு போய் சேர்க்க வேண்டிய ஒரு சாதாரண தகவலே தவிர மற்ற ஏதும் இல்லை. அவர் அங்கே உட்கார்ந் திருந்தார். செய்தியை கொண்டு செல்லும்

வேலையைச் செய்த அந்த மனிதன் அவருடைய பிரசன்னத்தில் இருந்தான். அவனைப் பொறுத்த வரையில் காரியமானது அவ்வளவு தான். அவருடைய பிரசன்னத்தில் இருந்தது அவனைப் பொருத்தவரையில் அதில் எந்த ஒரு அர்த்தமும் கிடையாது. ஆனால் அவர் யார் என்று அறிகின்ற உணர்வு நிலையில் அவன் இருந்திருப்பானானால், அந்த பையன் மரித்தோரிலிருந்து இன்று எழுந்து, இந்த வாரத்தில் நடந்து கொண் டிருக்கும் இந்த கூட்டத்தில் உட்கார்ந் திருப்பானானால், அதைக்குறித்து ஏதாவ தொன்றைச் செய்திருப்பான். நம்மெல்லா ரையும் குலுக்கியிருக்கும் ஒரு சாட்சியுடை யவனாக அவன் இருந்திருப்பான். ஆனால் அவரை அறிகின்ற உணர்வு இல்லாமல் அக்கறையற்றவனாக இருந்தான்.

63. இப்பொழுது, இங்கே இந்த காட்சியில் ஏதோ ஒரு தவறானது காணப்

படுகிறது. அது வெறுமனே... அது சரியான ஒன்றாக இல்லாதிருந்தது, அந்த பையன் களைத்துப் போய் சோர்வுற்று நடந்து சென்றதை இயேசு பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அந்த முழு காட்சியமைப்பானது - அங்கே ஏதோ தவறு இருந்தது. அந்தப் பரிசேயர் இயேசுவை வெறுத்தனர். அவர்கள் அவரை வெறுக்கையில் அவர்கள் எந்த முகாந்திரத்தைக் கொண்டு இயேசுவை சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொள்ள அழைத் திருந்தனர்? அந்த பரிசேயன் தன் சட்டைக் கைப்பகுதியில் ஒன்றை பின்னர் பயன்படுத்து வதற்காக இரகசியமாக மறைத்து வைத்திருந் தான். (பழங்கால சூதாட்ட உச்சரிப்பு ஆகும்) ஏதோ ஒரு தந்திரத்தை, வைத்திருந்தான். அவன் பின்னர் உபயோகப்படுத்த ஒரு தந்திரத்தை இரகசியமாக வைத்திருந்தான். ஏனென்றால் அவர்கள் இயேசுவை வெறுத் தனர். இப்பொழுது, சரியாக அப்பொழுதே

இயேசு அதை அறிந்து கொண்டார் என்று நான் நம்புகிறேன். பாருங்கள், மக்கள் காரியங்களை ஒருங்கே கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். -

64. என் தாயார் “ஒரே இறகுள்ள பறவைகள் ஒன்றாக ஒருங்கே காணப்படும்” என்னும் பழமொழியைக் கூறுவது வழக்கம் (birds of featherflock together, என்னும் கருத்திற்கு ஒரே குணாதிசயம் உள்ள மனிதர் ஒருமித்து ஒன்றாகச் செயல்படுவர் என்று அர்த்தம் - தமிழாக்கியோன்), பருந்துகளும் புறாக்களும் ஒன்றாகச் சேர்ந்து உண்பதை உங்களால் காணமுடியாது. அவைகள் .... அவைகளில் ஒன்று செத்ததைத் தின்னும் வகையாகும். புறாவால் பருந்தின் உணவைத் தின்ன முடியாது ஏனென்றால் புறாவிற்கு பித்த நீர் இல்லை. அதினால் பருந்தின் உணவை ஜீரணிக்க முடியாது.

65. ஆகவே ஏதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருந்தாலொழிய உங்களால் விசுவாசிகளையும் அவிசுவாசி களையும் ஒன்றாகக் காணமுடியாது. ஏதோ ஒரு தவறு இருந்தது. அந்த பரிசேயன் ஒரு தந்திர காரியத்தைச் செய்யும் படிக்கு வைத்திருந் தான். அதை அவன் இயேசுவிடமாக பிரயோகிக்க விரும்பினான்.

66. இப்பொழுது, நீங்கள் ஜனங்களை எடுத்துக்கொள்வீர் களானால், இளம் வயதினரை, வாலிபப் பிள்ளைகளை எடுத்துக் கொள்வீர்களானால் - வயதானவர்களோடு இருக்க அவர்கள் விரும்பமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களிடையே பொதுவான காரியங்களைக் கொண்டிருப் பார்கள். திருமணமான இளம் தம்பதியரும் தங்களிடையே பொதுவான காரியத்தைக் கொண்டிருப்பார்கள். வயதான மக்களை பார்ப்போமானால் அவர்களும் சிறு பிள்

ளைகளுடன் அதிக நேரம் இருக்கமாட்டார்கள். அவர்களுக்கும் பொதுவான ஒன்று இருக்கும்.

67. ஒரு சிறு பெண் எப்பொழுதுமே தன்னுடைய பாட்டியுடனே இருப்பதை நீங்கள் காண்பீர்களானால், அங்கே ஏதோ ஒன்று தவறாக இருக்கின்றது. அவர்களுக்கிடையே மிக அதிக வருடங்கள் வித்தியாசம் இருக்கின்றது. ஒன்று, அவள் பாட்டியின் செல்லப்பிள்யையாக இருக்க வேண்டும். அல்லது பாட்டி ஒரு பை நிறைய மிட்டாய் களை வைத்திருப்பாள் என்று தானிருக்கும், பாருங்கள். ஏதோ காரியங்கள் இருக்க வேண்டும். எனக்கும் ஒரு பேரப்பிள்ளை உள்ளது, ஆகவே எனக்குத் தெரியும். பாருங்கள், ஏதோ ஒரு காரியமானது இருந்தாக வேண்டும். அந்த சிறு பெண் எப்போதும் பாட்டியுடனே இருக்கிறதென்றால், பாட்டி ஒரு பை நிறைய மிட்டாய்

வைத்திருக்க வேண்டும் அல்லது வேறெ தாவது இருக்க வேண்டும்.

ஆகவே இந்த பரிசேயன் ஏதோ ஒரு தந்திர காரியத்தை வைத்திருந்தான்.

68. அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி யிருந்த ஒரு ஊழியக்காரர் கூட்டத்தில் இது எல்லாம் சம்பவித்தது. அந்த கூட்டத்தில் மையத்தலைப்பாக தன்னை தீர்க்கதரிசி என்று அழைத்துக் கொள்ளும் அந்த நபரைக் குறித்து இருந்து விவாதிக்கப்பட்டது. அவர் ஒரு தீர்க்கதரிசி என்று அவர்கள் விசுவா சிக்கவில்லை, ஏனென்றால் தங்கள் போத கங்களைக் கொண்டு பார்க்கையில் அவர் களைச் சார்ந்திருந்து அவர்களோடே இசைந்து செல்லாத ஒரு மனிதனை அவர்களால் தீர்க்கதரிசியாகக் காணமுடியவில்லை. ஆகவே இந்த ஊழியக்காரர் கூட்டத்தில்

அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று தீர்மானித்தனர்.

69. ஆகவே அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று இந்தப் பரிசேயன் அவர்களுக்கு நிரூபிக்க விழைகின்றான். அவர்களுடைய தீர்மானம் நிச்சயமானதே என்று நிரூபித்து, இயேசு அந்த நகரத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாகவே சபை மக்களுக்கும், அந்நகர மக்களுக்கும் அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று காண்பிக்க அவன் விரும்பினான். அதற்கு முன்னர் இயேசு அந்த நகரத்திற்கு வந்ததே கிடையாது. ஆகவே அவர் வருவதற்கு முன்னரே அவர் யார் என்று வெளிப்படக் காண்பித்துவிட வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக் கிறான். ஓ அந்த ஆவியைப் பாருங்கள்! அது இன்னுமாக ஜீவித்துக் கொண்டிருக்கிறது: அவர் யாரென்று வெளிக்காண்பித்து விட வேண்டும், அவர் அங்கே நடத்தவிருக்கின்ற

கூட்டத்திற்கு இடருண்டாக்கி தடைசெய்ய ஏதாவதொன்றைச் செய்யவேண்டும்

70. ஆகவே நாம் இங்கே காண்பது என்னவென்றால், "நான் ஒரு இரவு ஆகார விருந்தை ஏற்பாடு செய்வேன், அதற்கு எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி, நகரத்தில் இருக்கும் எல்லா மக்களையும் இங்கே வரவழைப்பேன், அப்பொழுது அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று நாம் நிரூபிப்போம். நாங்கள் அதை நிரூபிப்போம்" என்று அந்த பரிசேயன் கூறினான்.

71. ஆதலால், இந்த காரியதைச் செய்வதானால் அவன் சிறிது உயர்வு .... ஒருக்கால் அவன் குருக்களில் ஒருவனாக ஆகிவிடலாம் அல்லது ஏதாவது ஒரு பதவி பெறலாம் என்று அந்தப் பரிசேயன் நினைத்திருக்கக்கூடும். அப்படிச் செய்வதன் மூலம் தன்னுடைய குழுவில் மிகப்பிரபலம் வாய்ந்

தவனாக ஆகியிருப்பான். அந்த விருந்தில் அவன் கர்த்தராகிய இயேசுவைக் குறித்து அவன் பரியாசம் செய்து அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று நிரூபித்து அவரை தர்மசங்கடமான ஒரு நிலைக்கு தள்ள வேண்டும் என அவன் விழைந்துக் கொண்டிருந்தான். அப்படிச் செய்வானானால் அவன் பரிசேயர்கள் மத்தியில் ஒரு பெரிய ஆளாக, ஒரு மிக மகத்தான மனிதனாக போற்றப்படுவான்.

72. இப்பொழுது, நாம் காண்பது என்னவென்றால் அந்த தகவல் கொண்டு செல்லும் பணி செய்யும் நபர் திரும்ப வந்து தன்னுடைய எஜமானிடம், ''நான் அவர் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தேன், அவர் உத்தரவாதமும் அளித்தார். அவர் இங்கே இருப்பார். ஏனென்றால் அவர் நடந்து கொண்ட விதமானது அவர் கண்டிப்பாக இங்கே இருப்பார் என்றே காண்பித்தது.

அவர் கட்டாயம் விருந்தில் பங்கெடுப்பார்" என்று கூறினான் என்று காண்கிறோம். அது சரி.

73. இப்பொழுது அந்த பரிசேயன் ஒரு குறிப்பிட்ட தருணத்திற்காக காத்துக்கொண் டிருந்தான். எல்லாம் சரியாக இருக்கும் நேரத் தில் அந்த விருந்தை அமைக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஒருக்கால் இன்றிரவு நாம் நம்முடைய இந்த நாடகத்தில் என்ன காண்கிறோம் என்றால், அவன் விருந்தை அமைத்த. நேரமானது திராட்சைகள் பழுத்திருந்த காலமாக இருந்தது. திராட்சைப்பழம் விளைகின்ற காலத்தில் நீங்கள் பாலஸ்தீனாவில் அல்லது கலிபோர்னியாவில் இருந்ததுண்டானால் மிகப்பெரிய திராட்சைப்பழக்குலைகள் சாறு ஒழுகின்ற அளவிற்கு பழுத்துக் காணப்படு வதை நீங்கள் காணலாம் அங்கே அந்த பிரதேசம் முழுவதிலும், பள்ளத்தாக்கிலும்

அந்த திராட்சைப்பழங்களின் நறுமணத்தால் நிறைந்து காணப்படும். அந்த விருந்தை எப்பொழுது நடத்த வேண்டும் என்று அந்தப் பரிசேயனுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவன் அந்த குறிப்பட்ட காலத்தை அவன் குறித்தான். ஒரு குறிப்பிட்ட நாளிலே அவர்கள் இந்த விருந்தை நடத்தவிருந்தனர்.

74. முடிவாக அந்த விருந்தானது நடக்கவிருந்த அந்த நேரமானது வந்தது, அப்பொழுது அந்தப் பரிசேயன் எல்லோரும் வரும்படியாக அவர்களுக்கு அழைப்பு கொடுத்தான், பிரசித்திப்பெற்ற எல்லாரையும், எல்லா கழகங்களையும் மற்றும் பிறரையும், தான் வசித்த நகரத்தில் இருந்த, எல்லாரும் கூடி பழகுகின்ற இடமாகிய கிளப்புகள் (Clubs) எல்லாவற்றிற்கும் அழைப்பு விடுத் தான். அவனுடைய மகத்தான அரண் மனைக்கு அவர்கள் எல்லாரும் வர இருந்

தனர். அந்த அரண்மனை மிக உயர்ந்த ஒரு இடத்தில் அமைந்திருந்தது. அங்கே நகரத்தில் ஒரு பெரிய சொத்தாக அது இருந்தது. ஆகவே இந்த விருந்தானது நடத்தப்பட வேண்டிய தருணமானது வந்தது. அங்கே இருந்த முற்றமானது மெருகேற்றப்பட்டது, மேஜைகள் எல்லாம் சீராக அமைக்கப் பட்டன, விருந்தின் அறையும் ஆயத்தப்படுத் தப் பட்டது.

75 அதன் பிறகு, அவன் தன்னுடைய விருந்தாளிகள் வரும் போது அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை செய்தான். விருந்து வைப்பவர் எவரும் அதைச் செய்வர். ஆகவே அவன் குதிரைத் தொழுவ பணியாளர்கள் என்று அழைக்கப் பட்ட சில பணியாளர்களை அவன் வேலைக்கு அமர்த்தினான், ஏனென்றால் அவனுடைய விருந்து வைப்பவர், இல்லை, அவனுடைய விருந்தாளிகளில் சிலர்

இரதங்களில் வருவார்கள், சிலர் கோவேறுக் கழுதையின் மேலேறி வருவார்கள், சிலர் நடந்து வருவார்கள். ஆகவே, ஒரு விருந் திற்கு ஏற்பாடு செய்கின்ற எவருமே தங்க ளுடைய விருந்தாளிகளை உபசரிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார்கள். ஆகவே இந்த பரிசேயன் எல்லாக் காரியத் தையும் ஏற்பாடு செய்தான், தன்னுடைய எல்லா வேலைக்காரரையும் ஏற்பாடு செய்து அவர்களை தயாராக இருக்கும்படிக்குச் செய்தான்; குதிரைகளைக் கொண்டு சென்று வைப்பதற்கான குதிரைலாயத்தில் குதிரைத் தொழுவ பணியாளர்களை அழைத்து வந்தான், அக்குதிரைகளுக்குத் தேவையான தீவனங்களும் மற்றும் பொருட்களையும் தயாராக வைத்தான்.

76 பிறகு அழைப்பிதழ்களை வாங்கிப் பார்க்கும் பணியைச் செய்யவேண்டிய அறைகளைக் காப்பவர்கள் அல்லது ஒரு

வாயிற்காப்போனை அவன் ஏற்பாடு செய்திருந்தான் - ஏனென்றால், ஒருவன் அழைக்கப்பட்டிலிருந்தாலொழிய விருந்தில் பங்குக்கொள்ள முடியாது - அதனால் அழைப்பிதழ்களைப் பார்க்க வாயிற் காப்போன் நியமிக்கப்பட்டான். விருந்தில் யார் யார் பங்கெடுக்கப்போகின்றனர் என் பவர்களுடைய பெயர் பட்டியலை அவன் வைத்திருந்தான். அவர்கள் வரும் போது தங்கள் பெயர் இருப்பதை அடையாளம் காட்டுவர், பிறகு அவர்களால் உள்ளே செல்ல முடியும்.

77. பிறகு, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று .... அவர்கள் சிறிது நேரத்திற்கு என்ன செய்வார்கள் என்பதை நாம் சற்றுப்பார்ப்போமாக, நான் கிழக்கத்திய நாடுகளில் இருந்துள்ளேன், உங்களில் அநேகர் கூட அங்கே இருந்திருக்க வகை யுண்டு, அவர்கள் எப்படி அதைச் செய்வார்

கள் என்று. நான் கவனித்திருக்கின்றேன். அது மிகவும் கவனத்தைக் கோருகின்ற ஒன்றாகும். நீங்கள் கவனித்துப்பார்ப்பீர்களானால், காரியங்களெல்லாம் சரியாக செய்து முடிக்கப்பட்ட பிறகு, அவர்கள் வாசலண்டை வருகையில் முதலாவதாக, வாயிற் காப்போன் அவர்கள் யார் என்று கேட்பான். அப்பொழுது அவர்கள் தாங்கள் யார் என்று கூறுவர். அவன் தன்னிடம் உள்ள பெயர் பட்டியலைப் பார்த்து அங்கே பெயர் இருப்பதைக் காண்பான். அவன் அதை உறுதிப்படுத்தும்படிக்கு பெயர் பட்டியலை சரிபார்ப்பான். பிறகு அவன் செய்வது என்னவென்றால், அவன் விருந்தாளியினுடைய கோலை எடுத்து அதை மூலையில் வைப்பான். விருந்தாளி நடந்து வந்திருந்தால் அல்லது ஒரு குதிரையில் வந்திருந்தால், குதிரை தொழுவப் பையன்கள் அவன் வந்திருக்கும் குதிரைகளை ஓட்டிப் பத்திர

மாகக் கட்டி குதிரைலாயத்தில் நிறுத்தி வைப்பார்கள்.

78. இப்பொழுது அடுத்ததாக விருந்திற்கு அழைக்கப்பட்ட அந்த மனிதன் செய்வது என்னவென்றால் அவன் விருந்து அளிக்கப் படும் மண்டபத்திற்குள்ளே செல்கிறான். அங்கே மண்டபத்திற்குள்ளே வீட்டு வேலை யாட்கள், கால்களைக் கழுவும் வேலை செய்யும் பணியாளர்கள் அங்கே இருந்தனர், மிகக்குறைந்த சம்பளத்திற்கான வேலை அதுவாகும், காலைக் கழுவும் பணியாள்.

79. அதைக்குறித்து சற்று சிந்திப்போ மானால் - நாம் நம்மை ஏதோ ஒரு பெரிய ஆள் என்று நினைத்துக் கொள்கிறோமே - நம்முடைய கர்த்தர் பூமியிலே தம்மை ஒரு கால்களைக் கழுவும் பணியாளராக அடை யாளப்படுத்திக்கொண்டார். சரியாக அதைத் தான் அவர் செய்தார். ஆனால் நாமோ

நம்மை ஒரு பெரிய நபராகக் கருதிக்கொள் கிறோம்! நாம் இங்கே பள்ளிக்குச் சென்று சிறிது கல்வியைப் பெற்றுக்கொள்கிறோம், சில பெரிய வார்த்தைகளை உச்சரிக்கும் படியாக அவைகளைக் கற்கிறோம், பிறகு திரும்பி வந்து கோட்டு சூட்டுகளை அணிந்து வெளியே சென்று டாக்டர், முனைவர் பட்டம் பெற்றவர் என்றும், ரெவெரெண்ட், சங்கை என்றும் மற்றும் பெரியவர் என்றும் அழைக் கப்பட விரும்புகிறோம்.

80. சிறிது காலத்திற்கு முன்னர் ஒரு பெரிய அருங்காட்சியகத்தில் (Museum) இருந்தேன். 150 பவுண்ட எடை (69 கிலோ - தமிழாக்கியோன்) கொண்ட ஒரு மனிதனின் உடலுக்குள் என்னென்ன இரசாயனங்கள் இருந்தன என்பதைக் குறித்த ஒரு மதிப் பீட்டை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு மனிதன் உருப்படுத்தப்படுகையில் அவ

னுடைய மதிப்பு எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா? அவனுடைய மதிப்பு 84 சென்டுகள் (Cent) மட்டுமே. பிறகு நீங்கள் 84 செண்ட் மதிப்புள்ளவர்களின் மீது பத்து டாலர் மதிப்புள்ள ஒரு தொப்பியை அணிந்து, ஐந்நூறு டாலர் மதிப்பு மிக்க ஒரு மிங்க் கோட்டை அணிந்து கொண்டு, உங்கள் மூக்கை மேலே உயர்த்திக் கொண்டு நிற்கின்றீர்கள். ஒரு மழை பெய்யுமானால் அது உங்களை மூழ்கடித்துவிடும். ஆகவே, உங்கள் சரீரமானது வெறும் 84 சென்ட் மதிப்புள்ளதாக இருக்கையில் (சரியே!) நீங்கள் உங்களையே ஒரு பெரிய ஆளாகக் கருதிக்கொண்டு உங்கள் சரீரத்தைப் பேணி காத்துக்கொள்கிறீர்கள். ஆனால் கோடிக் கணக்கான மதிப்பு வாய்ந்த உங்கள் ஆத்துமாவைக் குறித்து உங்களுக்கு அக்கறையில்லை, அல்லது நீங்கள் அதைக்குறித்த எந்த ஒரு செயல்பாட்டையும் செய்வ தில்லையே!

அந்த வித்தியாசத்தை அந்தக் கருத்தை எப்படி நாம் பெறப்போகிறோம்!

81. இப்பொழுது, இந்தக் காலைக் கழுவும் பணியாளன் அவர்களுடைய பாதங்களைக் கழுவும் வேலையைச் செய்ய வேண்டியவனாக இருந்தான். இப்பொழுது .... நீங்கள் பாலஸ்தீனாவில் பிரயாணம் செய்யும் போது, அந்த பாலஸ்தீன அங்கியானது ஒரு தளர்ந்த துணியாக இருக்கும். அது கீழே தொங்கும். ஆகவே அவர்கள்... மிருகங்களும் மனிதரும் ஒரே அடிச்சுவட்டில் தடம் பின்பற்றி நடந்து வருவார்கள் - மிருகங்களும் கூட அந்த அடிச்சுவட்டிலேயே தடம் பின்பற்றி நடந்து வரும் ..... அப்பொழுது அந்த மிருகங்கள் நடந்து வந்த தடத்திலிருந்து புழுதியானது மேலெழும்பி வரும், அந்தப் புழுதியில் ஒருவிதமான துர்நாற்றம் இருக்கும். அவர்கள் கால்களின் வியர்வையில் அப்புழுதி கலந்து

விடும். அவர்களுடைய கால்களில் பாதரட்சைகளைப் போட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த பாதரட்சைகள் வியர்வையினால் நனைந்து ஈரமாகி, பிசுபிசுப்பானதாக இருக்கும்.

82. ஆகவே, அந்த மிருகங்கள் நடந்த பாதையிலிருந்து வரும் இந்த துர்நாற்றமானது, தளர்ந்து கீழே பாவாடையைப் போலத் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பாலஸ்தீன வஸ்திரம் மண்ணில் படும் போது இந்த புழுதி அந்தத் துணியில் ஒட்டிக் கொண்டு அவர்களுடைய பாதத்தில் பட்டு அவர்களுடைய கால்கள் முழுவதுமாகப் பரவி விடும். அந்த மிருகங்கள் நடந்து சென்ற அந்த தடப்பகுதியைப் போலவே இவர்களுடைய கால்கள் துர்நாற்றம் அடிக்கும். ஆகவே அந்த பரிசேயர்கள் வைத்திருந்த வீடுகளுக்குள் வரும் போது (அந்த பரிசேயன் பெர்சியா நாட்டிற்கு

ஆட்களை அனுப்பி அந்த அருமையான உயர்ரக கம்பள விரிப்புகளையும் மற்றவை களையும் வாங்கியிருந்தான்) முழுவதும் துர்நாற்றம் நிறைந்தவனாக உள்ளே வந்து விருந்து வைப்பவன் முன்பாக நிற்க நீங்கள் விரும்பமாட்டீர்கள். ஆகவே அந்த துர்நாற் றத்தைப் போக்க ஒரு வழியை அவர்கள் வைத்திருந்தார்கள்; அவர்கள் கால்கழுவும் பணியாளன் ஒருவனை வேலைக்கு அமர்த்தி யிருப்பார்கள், அவன் அங்கே தங்கியிருந் தான்.

83. நீங்கள் உள்ளே வந்தவுடனே உங்கள் பெயர் பதிவு செய்யப்பட்டு, அந்த ஆள் குதிரைகளை அல்லது உங்கள். கால்நடை பிராணியை தொழுவத்திற்குக் கொண்டு சென்று அவைகளுக்குத் தீவனத்தைப் போடக் கொண்டு சென்றிருப்பான் (அவ்விதம் செய்ய ஒரு கூட்டம் பையன்கள் இருந்தனர்). அங்கே அந்த வாயிற்காப்போன் அவன் கையில்

வைத்திருக்கும் பெயர் பட்டியலைப் பார்த்து உங்களை அடையாளங்கண்டு கொள்வான். பிறகு கால்கழுவும் பணியாளன் உங்கள் கால்களைக் கழுவுவதற்கு தயாராக நீங்கள் இருப்பீர்கள்.

84. அப்பொழுது நீங்கள் உள்ளே கொண்டு செல்லப் படுவீர்கள். அங்கே உட்கார்ந்து உங்கள் காலை வைக்கையில் அவன் பாதரட்சையை இழுத்து கழற்றி அதை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைப்பான், அதனால் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று அவன் அறிந்து கொள்ள ஏதுவாகும். இங்கே மற்றுமொரு பகுதியில் அவன் ஒரு சிறிய காலணியை வைத்திருப்பான். அவன் உங்கள் கால்களை கழுவி முடித்த பிறகு - தூசியை முழுவதுமாக கழுவி முடித்து சுத்தம் செய்து நீங்கள் சோர்வு நீங்கி இதமாக உணரும் படிக்குச் செய்து பிறகு துணியினாலான இந்த சிறிய காலணியை அவன் அணிவிப்பான்.

85. நீங்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது விமானங்களில் அதைக் காணலாம். இரவு நேரங்களில் நீங்கள் அணிந்துக் கொள்ளும்படிக்கு அவர்கள் உங்களுக்கு அதை அளிப்பார்கள், நீங்கள் ... பெண்கள் தங்கள் நீண்ட காலுறைகளை அணியா திருக்கையில் தங்கள் கால்களில் அணிந் திருக்கும் அந்த சிறிய காரியங்களைப் போல, என் மனைவியும் மகளும் சில நேரங்களில் அதை அணிந்திருப்பதை நான் காண்கிறேன். அது ஒரு சிறிய ..... அதை என்னவென்று அழைக்கின்றனர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் உங்கள் கால்களில் போட்டுக்கொள்ளும்போது அது காலுறை யின் (Socks) பாதப்பகுதியைப் போன்று இருக்கும்.

86. அந்த காலணி அதைப்போன்ற ஒன்றாக இருந்திருக்கும், "அது சிறிது

உயர்தரமானதாக இருக்கும், ஏனென்றால் நீங்கள் அந்த அழுக்கான பாதரட்சையை போட்டுக்கொண்டு அங்கே போடப்பட்டிருந்த அந்த கம்பள விரிப்புகளில் நடக்க விரும்ப மாட்டீர்கள். ஆகவே, உங்கள் பாதங்கள் கழுவப்படும். பிறகு நீங்கள் ... அடுத்ததாக உங்களுக்கு அணிவிக்கப்படுவது என்னவென்றால்..... இந்த சிறிய பூட்ஸை, காலணியை உங்கள் காலுக்கு அணிவிப்பார்கள், அதை நான் பூட்டி என்று அழைப்பேன்.

87. அதற்குப் பிறகு என்ன இருக்குமென்றால், அங்கே தன்னுடைய தோளின் மேல் ஒரு துடைக்கும் துவாலைத் துணியுடன் ஒரு மனிதன் நின்றிருப்பான், அவன் தன்னுடைய கையில் தைலத்தை வைத்திருப்பான். அது ஒரு வாசனைத் தைலமாகும். இப்பொழுது, அந்த பாலஸ்தீன சூரியனின் கதிர்கள் நேரடியாக உங்கள் கழுத்தில்

படும்போது, அது உங்கள் சருமத்தை சுட்டுப்புண்ணாக்கும், இன்னொரு காரியம் என்னவென்றால், அங்கே மேலெழும்பும் அந்த தூசியானது சில சமயங்களில் அவர்களுடைய தாடிகளிலும் தலைமயிர்களிலும் ஒட்டிக்கொள்ளும். ஆகவே இங்கே ஒரு மனிதன் தன் கையில் வாசனைத் தைலத்தை வைத்துக்கொண்டு ஒரு சிறிய பாத்திரத்தைப் பிடித்து நின்றிருப்பான். நீங்கள் அந்த தைலத்தை உங்கள் கையில் எடுத்து உங்கள் முகத்திலும், கழுத்திலும் பூசிக்கொள்ளலாம், பிறகு இந்தத் துணியைக் கொண்டு துடைத்து உங்கள் தலை முடியை வாரி சரி செய்து கொள்ளலாம். இப்பொழுது சில சமயங்களில்......,

88. இந்த தைலமானது கிடைப்பதற்கு மிகவும் அரிதான ஒன்றாகும், ஏனென்றால் அது மிகவும் அருமையான வாசனையைத் தருகின்ற ஒன்றாகும். அவர்கள் அதை மிக

உயர்ந்த மலைகளில் வளருகின்ற காட்டு ரோஜாச் செடியிலிருந்து அதை எடுப்பார்கள். பூவின் இதழ் விழுந்த பிறகு அந்த ரோஜா எப்படியிருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். அதன் மேல் ஒரு சிறிய பழம் போல வளரும். அவர்கள் அதை எடுத்து பிழிந்து இந்த வாசனை தைலத்தை செய் வார்கள். சேபா நாட்டு ராஜஸ்திரீ சால மோனைக் காண வந்த போது இந்த அருமை யான தைலத்தை தன்னுடன் கொண்டு வந்து சாலமோனுக்கு கொடுத்தாள் என்று கூறப் படுகின்றது. அது கிடைப்பதற்கு மிக அரிதான ஒன்றாகும். அந்த மலைகளுக்குள் செல்வதே மிக கடினமான ஒரு காரியமாகும்.

89. அதற்குப் பிறகு, அவர்கள் அந்த தைலத்தை எடுத்துத் தங்கள் தாடியிலும் கழுத்திற்குக் குறுக்கிலும் பூசிக்கொண்டு அந்த துணி துவாலையால் துடைத்து தங்களை சுத்தம் செய்த பிறகு, விருந்து வைப்பவனை -

தங்களுக்கு அழைப்பு கொடுத்த நபரை சந்திக்க தயாராக இருக்கிறார்கள். பாருங்கள். தங்கள் உடல் முழுவதுமாக தூசியினால் நிறைந்து அந்நிலையில் உள்ளே செல்வது சரியல்ல என்று அவர்கள் உணர்ந்திருப் பார்கள். அதன் காரணமாகத் தான் கால் கழுவுதல் இருந்தது, புரிகின்றதா. அவர்கள் மேல் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. அதனால் தான் தங்கள் கால்கள் கழுவப்பட வேண்டியிருந்தது. அவர்கள் அணிந்திருந்த அந்த பெரிய பாதரட்சைகளை அப்படி அணிந்து கொண்டு அந்த உயர்ரக கம்பள விரிப்புகளில் நடப்பதென்பது சரியானதாக இருக்காது என்று அவர்களுக்குத் தெரியும். அப்படியே அந்நிலையில் செல்வார்களா னால் அவர்கள் தர்மசங்கடமாக உணரு வார்கள். ஆனால் இப்பொழுது அவனுடைய பாதமானது கழுவப்பட்டு விட்டது. அவன் சுத்தம் பண்ணிக்கொண்டு தயாராக இருக்

கின்றான். அந்த தைலத்தினால் பூசப்பட்ட தினால் அவனின் மீது நறுமணம் வீசுகின்றது - தலை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுதல் என்று அவர்கள் அழைக்கின்றனர் - அந்த தைலத்தை தங்கள் முகத்தில் பூசி பிறகு ஒரு துணியைக் கொண்டு அதைத் துடைத்து விடுகின்றனர். இப்பொழுது அவன் புது மலர்ச்சி கொண்டவனாக அவன் இருக்கின்றான்.

90. இப்பொழுது அடுத்ததாக அவன் செய்வது என்னவென்றால், அவன் தனக்கு அழைப்பை விடுத்திருந்த விருந்தளிப்பவனை சந்திக்கின்றான். தன் உடல் முழுவதுமாக தூசியால் நிறைந்து விருந்தளிப்பவனை சந்திக்க அவனுக்கு விருப்பமே இராது. அதனால் தான் அவன் சுத்தம் செய்து கொண்டு புதுமலர்ச்சியுடனே இப்பொழுது ஆயத்தமாக இருக்கின்றான்.

91. பிறகு விருந்தளிப்பவன் கதவண்டையில் அவனைச் சந்திப்பான், முத்தமிட்டு வரவேற்பளிக்கும் ஒரு வித்தியாசமான முறையை அவர்கள் கொண்டிருந்தனர். அது இன்னும் சில சபைகளில் கைக்கொள்ளப் படுகிறது. அவர்கள் கரத்தைப் பிடித்து இந்த விதமாக திருப்பி (ஆண்கள்) ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொள்வர். இந்த விதமாக தோளின் மேல் கைப்போட்டு ஒருவருக்கொருவர் கழுத்துப்பகுதியில் முத்தம் கொடுப்பார்கள். ஆகவே விருந்தளிப் பவன் உங்களை முத்தமிடுவானானால், நீங்கள் மகிழ்ந்து வரவேற்கப்படுகிறீர்கள் என்று அர்த்தம். அது வரவேற்பின் முத்தமாகும். இப்பொழுது, உங்கள் சரீரம் முழுவதுமாக தூசியினால் நிறைந்த நிலையில் விருந்தளிப்பவன் உங்களுக்கு முத்தமிட நீங்கள் விரும்ப மாட்டீர்கள். ஆகவே வரவேற்பின் முத்தமானது உங்களுக்கு

அளிக்கப்படுமுன்னர் நீங்கள் முழுவதுமாக சுத்தமாக்கப்பட வேண்டும். ஆனால் ஓ! உங்களுக்கு வரவேற்பின் முத்தமானது அளிக்கப்பட்ட பிறகு நீங்கள் முழுக்க முழுக்க சகோதரனாகி விடுவீர்கள். அவ்வளவுதான். உங்களாலே... இன்றைக்கு நீங்கள் ஒரு வீட்டிற்குள் சென்று வரவேற்கப்படும் நல் லுணர்வை பெறுவீர்களானால் நீங்கள் அந்த வீட்டின் ஒரு அங்கத்தினராகவே உணர் வீர்கள். அவன் உங்களுக்கு வரவேற்பின் முத்தத்தை அளித்திருந்தான்.

92. யூதாஸ் மாய்மாலமாக இயேசுவுக்கு முத்தம் கொடுத்தது உங்களுக்கு நினைவிருக் கிறதா? பாருங்கள், விருந்தளிப்பவன் அவ னுக்கு முத்தமளித்தால் அது வரவேற்பாகும். அது ஒரு நண்பனின் முத்தமாக இருந்தது - உதடுகளில் முத்தம் அல்ல, ஆனால் கழுத்தில் முத்தமளித்தல் - அவன் விருந்தாளிகளை கழுத்தில் முத்தமளித்தான்.

93. இப்பொழுது, நாம் கவனிப்பது என்னவென்றால், அப்படிச் செய்யும் போது நீங்கள் உள்ளே செல்லலாம் என்று அர்த்தம். நீங்கள் குளிர்சாதன பெட்டியைத் திறந்து (காட்சியானது இன்றைய நாளாக இருக்கு மானால்) ஒரு பெரிய சாண்ட்விச் தின் பண்டத்தை நீங்களே எடுத்துக்கொண்டு கட்டிலின் மேல் படுத்துக் கொண்டு அதை சாப்பிடுவதானது - நீங்கள் அந்த வீட்டில் வரவேற்கப்பட்டிருக்கிறீர்கள், அதனால் நீங்கள் தாராளமாக அந்த வீட்டில் இருக் கின்றீர்கள். "வருக, வருக, உள்ளே வாருங் கள், அது .... நீங்கள் வீட்டில் நல்லுணர்வுடன் இருக்கின்றீர்கள். அந்த குடும்பத்தின் ஒரு அங்கத்தினராகவே உணர்கிறீர்கள். ஏனென் றால் நீங்கள் வீட்டினுள் இருக்கிறீர்கள்.

94. இப்பொழுது, உங்களுக்கு இந்த காரியங்களெல்லாம் செய்யப்படும்படிக்கு பார்த்துக்கொள்கிறீர்கள், தைலத்தால் அபிஷே

கிக்கப்படுகிறீர்கள், எல்லாவற்றையும் சுத்த மாக்கிக் கொள்கிறீர்கள், அப்பொழுது நீங்கள் முத்தமிடப்பட்டு வரவேற்கப்படுகிறீர்கள். பிறகு நீங்கள் உள்ளே சென்று அங்கே விருந்தில் எல்லாருடைய கரங்களை குலுக்கு கிறீர்கள். உங்கள் நண்பர்களை சந்திக்கிறீர்கள். விருந்தளிப்பவன் உங்களுக்கு முத்தமிட்டு உங்களை உள்ளே வரவேற்றுள்ளான். ஆகவே இப்பொழுது நீங்கள் விடுதலையாக தாராளமாக அங்கே இருக்கலாம். அங்கே இருக்கின்றவர்களில் ஒருவராக உங்களால் உணரமுடிகிறது. உங்களுக்கு அழைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. நீங்கள் சுத்தமாக் கப்பட்டுள்ளீர்கள். உங்களுக்கு வரவேற்பின் முத்தம் அளிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நீங்கள் அவர்களில் ஒருவராகிவிட்டீர்கள். உள்ளே சென்று ஐக்கியம் கொள்ளுங்கள்.

95. இப்பொழுது, இந்த சமயத்தில் அங்கே பின்புறத்தில் ஒரு தனி இடத்தில்

இரும்பு சட்டத்தில் ஆட்டு இறைச்சியை வைத்து நெருப்பில் சுட்டுக்கொண்டிருந்தனர் என்று நான் கற்பனை செய்து பார்க்கின்றேன். அதன் வாசனையானது பிரதேசம் முழுவது மாக பரம்பியிருந்தது, அதனோடு கூட திராட்சைப்பழங்களின் வாசனையும் மற்ற வையும் இருந்தன.

அங்கே சுற்றிலும் வேலியண்டையில் ஏழை மக்கள் அந்த வாசனையால் நாவூறிக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். அவர்கள் உள்ளே அழைக்கப்படவில்லை, இந்த விருந் திற்கு புகழ் பெற்றவர் மாத்திரமே அழைக் கப்பட்டிருந்தனர். ஆகவே விருந்தானது மிக அருமையாக நடந்து கொண்டிருந்தது. எல் லாமே மிக அருமையாக நடந்தேறிக் கொண்டிருந்தது - முழு வீச்சில் நடந்துக் கொண்டிருந்தது.

96. இப்பொழுது, அந்த பரிசேயனும் மற்றும் அவனுடைய நண்பர்கள் எல்லோரும் கண்ணாடி குவளைகளை, டம்ளர்களின் முனைப்பகுதியை ஒருவருக்கொருவர் மிருது வாக உரசி, அங்கே அச்சமயத்தில் பாலஸ் தீனாவில் இருந்த உடல்நலத்திற்கு அருமை யானதாக இருந்த மிகச் சிறந்த திராட்சைப்பழ ரசத்தை அருந்திக் கொண்டிருந்தனர் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவர்கள் செல்வந்தர்களாக இருந்தபடியால், அவர்களால் அதை வாங்க முடிந்தது. அவர்கள்..... ஒவ்வொருவரும், பெண்கள் தங்கள். அருமையான ஆபரணங்களுடன் இருந்தனர், அப்பெண்கள் அங்கே மூலையில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர், அங்கே சுவரோர மெத்தை இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர், அது அந் நாளின் வழக்கமாக இருந்தது ; ஆண்கள் திராட்சைரசம் பருகிக்கொண்டே பேசிக்

கொண்டு மகிழ்ந்திருந்தனர்; ஆசாரியனும் மற்றும் எல்லா ரபீக்களும் மற்றும் எல்லோ ரும் ஒரு மகத்தான தருணத்தை அனுப வித்துக் கொண்டிருந்தனர். விருந்தானது மிக அருமையாக முழு வீச்சில் நடந்துக் கொண் டிருந்தது.

97. ஆகவே அப்பொழுது இயேசு வானவர் - அவர் வழக்கம் போல ஓய்வுக்கு இடமில்லாமல் அலுவல் மிக்கவராக இருந் தார், அவருடைய ஊழிய அட்டவணை யானது தொடர்ந்து நீண்டுக்கொண்டே இருந்தது - அவர் எப்போதுமே தம்முடைய சந்திப்பு திட்டங்களை (appointments) காத்துக் கொள்கிறார். நீங்கள் அதன் மேல் நம்பிக்கை வைத்து காத்திருக்கலாம். அவர் தம்முடைய சந்திப்பு திட்டத்தை காத்துக் கொள்கிறவர் ஆவார்.

98. இப்பொழுது, அங்கே அறைக்குள் ளாக நோக்கிப் பார்த்து என்ன நடக்கிறதென்று சற்று நாம் பார்ப்போம். அங்கே ஒரு பரிசேயன் தன்னுடைய குவளையில் ரசத்தை உறிந்து குடித்துக் கொண்டு “ரபீ என்ன ஆயிற்று என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கூறிக்கொண்டிருந்தான், அந்தப்பெரிய சம்பாஷணையானது தொடர்ந்துக் கொண்டே இருந்தது, வியாபாரிகள் தங்கள் வியா பாரத்தைக் குறித்தும் மற்றவற்றைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தனர். அங்கே விருந் தானது முழுவீச்சில் நடந்துக் கொண்டிருந்தது. அது ஒரு மகத்தான விருந்தாக இருந்தது. -

99. ஆனால் கவனியுங்கள். அங்கே இயேசு யாராலும் கவனிக்கப்படாதவராக சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டிருந் தார். தாம் வாக்கு கொடுத்த தம்முடைய சந்திப்பு திட்டத்தை அவர் காத்துக்கொண் டார். ஆகவே அவர் அங்கு வந்தார். அவர்

எப்போதுமே தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்கிறார். அவர் தம்முடைய எல்லா வாக்குத்தத் தங்களையும் நிறைவேற்று கிறார். ஆனால் அவரைக் கவனியுங்கள். அவர் அழுக்கு நிறைந்தவராக அழுக்காக அங்கே உட்கார்ந்துக் கொண்டிருந்தார். அப்படிக் கூறுவதை நான் வெறுக்கிறேன். அவ்விதம் கூறுவது என்னைக் கொன்று போடுகிறது. பாருங்கள், அவருக்கு அழைப்பு அளிக்கப் பட்டிருந்த போதிலும், அவருடைய பாதம் அழுக்காக இருந்தது, அவர் வாசனைத் தைலத்தால் அபிஷேகிக்கப்பட வில்லை, அவருக்கு வரவேற்பின் முத்தமானது அளிக்கப்படவில்லை.

100. அது நம்முடைய நவீன எழுப்பு தல்களைப் போன்று தான் இருக்கின்றது. (ஃப்ரெஞ்ச் பாஷைக்காரர்கள் அவரை "ஜெசு" என்று அழைக்கின்றனர். அழுக்கான பாதத் துடன் "ஜெசு") உங்களால் அதை கற்பனை

செய்து பார்க்க முடிகின்றதா? விருந்திற்கான அழைப்பு அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது, அவரும் அங்கே வந்துள்ளார். அதோ அங்கே அவர் இருக்கின்றார். எப்படியோ ஒரு வழியில் அவர் உள்ளே வந்தார். கவனிக் கப்படாத நிலையில் அங்கிருந்தார். அங்கே யாராலும் கவனிக்கப்படாத ஒரு தனிமை மிக்க மனிதனாக அங்கே அவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். நம்முடைய நவீன எழுப்புதல் கூட்டங்களிலும், விருந்து களிலும், மத சம்பந்தமாகக் கூடி வருதல் என்று அழைக்கப்படுகிற காரியங்களில் புதிதான சூழ்நிலையில் எப்படி ஒருவர் தடுமாற்றமாகக் காணப் படுகின்றாரோ அதே போல தான் அவர் அங்கே இருந்தார்.

101. ஒரு புதிய சூழலில் தடுமாற்றம் கொண்டிருக்கும் ஒருவனைப் போன்று அங்கே அவர் இருந்தார், யாருமே அவர் இருப்பதைக் கண்டுகொள்ளவே இல்லை.

இயேசுவானவர் அந்த விருந்திற்கு அழைக் கப்பட்டிருந்த போதிலும் அங்கே இருந்த அவர்கள் அவரைக் கண்டு கொள்ளாமல் மற்ற காரியங்களில் மிக பரபரப்பாக இருந்தார்கள். ஆனால் அவர் அங்கே வந்த போதோ அவருக்கு வரவேற்பு கூட அளிக் கப்படாமல் அப்படியே விடப்பட்டிருந்தார்.

102. அங்கே கால்களைக் கழுவிக்கொண் டிருந்த பணியாளனுக்கு என்ன ஆயிற்று? அவருடைய காலைக் கழுவும் அந்த தரு ணத்தை அவன் எப்படி நழுவவிட்டான்? எனக்கு மாத்திரம் அந்த தருணமானது கிடைத்திருந்தால் மிக அருமையான ஒன்றாக இருந்திருக்கும். அதை நான் விரும்புகிறேன். ஓ என்னே! அவர் வரவிருக்கின்றார் என்று மாத்திரம் நான் அறிந்திருப்பேனானால், நான் அங்கே நின்று கொண்டு அவருக்காக காத்திருப்பேன். அவருடைய வருகைக்கு நான் தயாராக இருந்திருப்பேன். எப்படி

அவன் அந்த சந்தர்ப்பத்தை தவற விட்டான்? அந்த கால் கழுவும் பணியாளனை மிகவுமாக நாம் கடிந்து கொள்ள வேண்டாம். ஏனென் றால் நாமும் கூட அதே காரியத்தைச் செய்து அதை அறியாமல் இருப்போம், பாருங்கள். அவன் அவரைத் தவற விட்டான். ஓ. என்னே!

103. கவனியுங்கள். இன்றைக்கு நம்மு டைய அழைப்புகளுக்கும் கூட அவர் வரு கின்றார். அவர் நம்மிடையே வருகின்றார். அதைக்கூற எனக்கு விருப்பமில்லை, ஆனால் நான் அதைக்கூறியாக வேண்டும். அன்று அவர் மக்களுடைய பார்வையில் எப்படி அழுக்காக அங்கே உட்கார்ந்து காணப் பட்டாரோ, அதே விதமாகத் தான் நம் மத்தியில் அவர் அவ்விதமாகப் புரிந்துக் கொள்ளப்பட்டுள்ளார். அது முற்றிலும் சரியே - அவரை பரிசுத்த உருளையர் என்றும் மற்ற பெயர்களைக் கொண்டும் அழைக்கின்றனர்.

ஆனாலும் நாம் ஒரு எழுப்புதலுக்காக கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறோம். அவர் வருகின்றார். அவர் வந்து நிற்கின்ற போது, அந்த விருந்தில் அவர்கள் அவருக்கு என்ன செய்தனரோ அதே போலத்தான் நாமும் அவரைக் கவனிக்காமல் இருந்து விடு கிறோம்.

104. யாரோ ஒருவர் தேவனுடைய ஆவியினால் எழும்பி "ஆமென்" என்று கூச்சலிடும் போது அல்லது அந்த விதமாகச் செய்யும் போது அல்லவென்றால் இயேசு அந்த வழியாகக் கடந்து செல்லும் போது அப்படிச் செய்தால்..... என்ன ஆகும் தெரி யுமா, அவர்கள் சபையிலிருந்து வெளியே தூக்கி எரியப்படுகின்றனர். ஆம், அப்படிக் கூறுவதானது சபைக்கு மிகப் பயங்கரமான அவமானம் என்றும், மக்களுக்க அவமானம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்; ஆம்,

இயேசு தாமே அந்த வழியாக கடந்து சென்றார்.

105. அவர் வந்து வார்த்தையை அடையாளம் காண்பித்து அப்போது அவர் செய்தது போல இன்றைக்கும் அவர் செய்வதைக் காணும் போது இன்று மக்கள் "அது குறி சொல்லுதலாகும், ஏதோ ஒரு மனோ தத்துவமாகும் அல்லது ஏதோ ஒரு தீய ஆவியாகும்" என்று கூறுகின்றனர். அங்கே அவர் அழுக்கு படிந்தவராக உட்கார்ந் திருந்தாரோ அதே போலத்தான் மக்களின் முன்னிலையிலும் அவர் அழுக்காக இருக் கின்றார் - தேவனுடைய வார்த்தையாகிய இயேசு. ஆனால் நாமோ அதைக் குறித்து ஒன்றுமே செய்வதில்லை. நாம் நம்முடைய ஸ்தாபனத்திலோ அல்லது நம்முடைய சமுதாய அந்தஸ்திலோ மிகுந்த ஈடுபா டுள்ளவர்களாக உள்ளோம். அவருடைய நாமத்தைக் கொண்டு நாம் அழைக்கப்

படுவதில் வெட்கம் கொள்கிறோம். கூறப் போனால் நாம் இயேசுவைக் குறித்து வெட்க மடைகின்றோம்.

106. அவர் அழுக்காக இருந்தபடியால் அவரைக் குறித்து அவர்கள் வெட்கமடைந் தார்கள். அவ்விருந்தில் இருந்த விருந்தாளி களுக்கு அவர் யார் என்று தெரியாதிருந்தது. அவர் மிகவும் அழுக்காக இருந்தபடியினால் அவரைக் குறித்து வெட்கமடைந்திருந்தனர்.

107. அதே போன்று தான் இன்றைக்கும் உள்ளது. அவர்கள் இன்னுமாக அவரைக் குறித்து வெட்கம் கொண்டுள்ளனர். ஏனென் றால் அவரை எந்தெந்தப் பெயர் வைத்து அழைக்க முடியுமோ அப்படியெல்லாம் அழைத்து அவர் மேல் அசுத்தத்தைக் கொட்டிக் குவிக்கின்றனர். அதை பரிசுத்த உருளையர்கள் என்றும் மற்றும் அவர்கள் மனதுக்கு தோன்றுகின்ற எல்லா அவப்பெயர்

களையும் கொண்டு அழைக்கின்றனர். அதைக் குறித்து யாரும் ஒன்றுமே செய்வதில்லை. அதோ அவர் அங்கே உட்கார்ந்துக் கொண் டிருக்கிறார். அவருடைய பாதம் அழுக்காக உள்ளது, யாருமே கண்டுகொள்ளாத ஒரு மனிதாக விருந்தில் இருக்கின்றார், மதப்பிர காரமான கூட்டத்தில் யாராலுமே கவனிக் கப்படாமல் அசட்டை செய்யப் பட்டவராக இருக்கின்றார். அவர் அழைக்கப்பட்டுள்ளார். ஒரு எழுப்புதலுக்கு வரவேண்டும் என்று அவரை நாம் கேட்கின்றோம். அவர் வரும்போதோ, அங்கே விருந்தில் எப்படி அவரை நடத்தினார்களோ அதே விதமாகத் தான் அவரை நாம் நடத்துகிறோம், அவர் வந்து நம்மை அடையாளம் காண்பித் துள்ளார். ஆனால் அவரை வரவேற்று உரையாட யாருக்குமே விருப்பமில்லை.

108. "அவர் தாமே ஒரு விதமான ஒரு தந்திர வித்தையோ அல்லது அல்லது -

அல்லது ஏதோ ஒரு விதமான அற்புதத்தைச் செய்திருப்பாரானால், அவர் பிலாத்துவிற்கு முன்னால் அவர் செய்தது போல.... அந்த ஒரே ஒரு தருணம் தான் பிலாத்துவிற்கு இருந்தது, அவன் அவரை நோக்கிக் கேட்டான், அவர் ஏதாவது ஒரு காரியத்தை செய்ய அதைத்தான் பார்க்க வேண்டும் என்று விரும்பினான், "ஏதாவது ஒரு அடையா ளத்தை அவர் செய்கிறாரா பார்க்கலாம்" என்றான். அவன் முதலாவதாக மனந்திரும்பி யிருக்க வேண்டும்!

109. நரகத்தை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்ற இந்த கொடூரமான உலகமானது இன்றிரவு அதைத்தான் செய்ய வேண்டியதாக இருக்கின்றது, அது தன் பாவங்களுக்காக மனந்திரும்பியாக வேண் டும். ஸ்தாபனத்தில் அங்கத்தினர்களும் தங்கள் அவிசுவாசத்திற்காக மனந்திரும்பி அவருக்காக நிற்கவேண்டியவர்களாக இருக்

கின்றார்கள். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கின்றார். அப்போது அவர் செய்தது போலவே இப்பொழுது தம்மைத்தாமே அடையாளங் காண்பிக்கின் றார். அந்த பரிசேயன் எப்படிப்பட்ட ஒரு மனப்பான்மையைக் கொண்டிருந்தானோ அதே போன்றதான ஒரு மனப்பான்மையை மக்கள் இன்றைக்குக் கொண்டுள்ளனர். அதே விதமான ஒரு மனப்பான்மையை உடை யவர்களாக இருக்கின்றனர் - அவருக்கு அழைப்பு விடுத்த பிறகு, அவர் வந்த உடன் கண்டுகொள்ளாமல் அப்படி உட்காரவைத்து விடுவது. அவர் அவர்களுக்குத் தேவை யில்லை. ஒரு வழக்க மரபிற்காக அவரை அழைக்கின்றனர், அவ்வளவு தான், அவர் அதை அறிந்திருக்கின்றார்.

110. அவரைக் கழுவி சுத்தப்படுத்து வதற்கு பதிலாக, அவரின் பேரில் இருக்கின்ற நிந்தையைக் கழுவி சுத்தப்படுத்துவதற்கு

பதிலாக, அவர்கள் அப்போது செய்த விதமாகவே இன்று நாம் அவருக்குச் செய்திருக்கின்றோம். எழுந்து நின்று "நீங்கள் தவறான கருத்தைக் கொண்டிருகிறீர்கள். அது தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப் பட்டதாகும். அதைத்தான் அவர் வாக்குத் தத்தம் செய்திருக்கின்றார். கடைசி நாட்களில் அவர் தம்முடைய ஆவியை ஊற்றுவேன் என்று கூறியுள்ளார். நாம் கடைசி நாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறு வதற்கு பதிலாக, அதற்கு பதிலாக அவர்கள் அன்று செய்தது போல நாமும் கண்டு கொள்ளாமல் அமர்ந்துள்ளோம். ஒரு தீர்மா னத்தைச் செய்ய நாம் பயப்படுகிறோம்.

111. அவர்களின் ஒருவர் எழுந்து, ''அங்கிருப்பது நசரேயனாகிய இயேசு அல்லவா. அவர் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நான் நினைக்கின்றேன்" என்று கூறியிருந்தால் எப்படியிருக்கும்? அவர்கள்

அவ்விதம் செய்யாதது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் ஒரு தேவனுடைய தீர்க்கதரிசி என்று அவர்கள் விசுவாசிக்காததினாலே.

112. இன்றைக்கும் கூட அவர்கள் விசுவாசிப்பதில்லை. அவர் ஒரு கல்வி புகட்டும் ஆசிரியர் மாத்திரமே என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர் ஒரு ஸ்தாபனம் மாத்திரமே என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர் இன்னுமாக ஒரு தீர்க்கதரிசியாக இருக்கின்றார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அங்கே இருந்தவர்கள், அவர் யாராக இருப்பார் என்ற கேள்விக்குரிய வராக்கி ஐயப்பாட்டை கொண்டு அவரை அப்படியே விட்டு விட்டனர். இன்று கூட அவர் யாராக இருக்கின்றார் என்கின்ற ஐயப்பாடானது, கேள்விக்குறியானது அப்படியே உள்ளது. அவருக்காக ஒரு தீர்மானம் எடுத்து நிற்க யாருமே தயாராக

இல்லை. அவர்கள், ''சரி, அவருக்கும் எனக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை, பாருங்கள். நான் ஒரு சபையைச் சார்ந்திருக்கிறேன். அதோ என் மேய்ப்பர் இருக்கின்றார், அவர்கள் எல்லோரும் சரியாக இங்கே உட்கார்ந்துள்ளனர். நான் ஒரு நல்ல மனிதன்" என்று மாத்திரம் கூறுகின்றனர். இயேசு அங்கே அழுக்கு படிந்த பாதத்துடன் உட்கார்ந்துள்ளார், யாருமே அவரைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை - அந்த அதே வேதாகமமே அங்கு .....

113 இப்பொழுதோ நாம் நடந்து சென்று கைகளைக் குலுக்கி புத்தகத்தில் நம்முடைய பெயரை பதிவு செய்து கொள்கிறோம். மெத்தோடிஸ்டுகளும்-நம்மை சேர்த்துக் கொள்ள அவர்களுக்கு பிடிக்கவில்லை யெனில் நாம் பாப்டிஸ்ட்களிடம் செல்கின் றோம். அவர்கள் நம்மை எட்டி உதைத்து வெளியே தள்ளின பிறகு நாம் நசரீன்களிடம்

செல்கிறோம். ஒருத்துவக்காரர்களும் நம்மை எட்டி உதைத்து வெளியே தள்ளுகின்றனர், பிறகு நாம் இருத்துவக்காரரிடம் செல்கி றோம். இருத்துவக்காரர் நம்மை எட்டி உதைத்து வெளியே தள்ளின பிறகு நாம் திரித்துவக்காரரிடம் செல்கிறோம். ஆகவே நம்மால் எந்த ஸ்தாபனத்தையுமே பொறுத்து இருக்கமுடியவில்லை, எல்லாமே குளிர்ந்து போய் விறைத்துப் போய் அசைவற்று இருக்கின்றன. அதே விதமாகத் தான் எல்லாமே, நாம்...,

114. இயேசுவரும் போது நாம் அவர் யார் என்று கூட அறிந்துக் கொள்வதில்லை. அதைக்குறித்து நமக்கு அக்கறை கிடையாது. அந்தவிதமாகத் தான் அவர்கள் செய் கின்றனர். ஆனாலும் நாம், "கர்த்தராகிய இயேசுவே வாரும், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று கூக்குரலிடுகிறோம், அவரும் வருகின்றார். அப்பொழுது நாம் என்ன

செய்கிறோம்? அவர்கள் அங்கே செய்த அதே காரியத்தைத் தான் செய்கிறோம்? என்ன? அவர்கள் எதையாவது ஒன்றைக் கூறினால் நாம் ஏற்றுக் கொள்கிறோம்; யாராவது ஒருவர் கேட்பார்கள், அதைக் குறித்து பரியாசம் பண்ணுவார்கள், ஆகவே, அவர் அழுக்குப்படிந்தவராக உட்கார்ந் திருக்கும்படிக்கு அவர்கள் அப்படியே விட்டு விடுகின்றனர். அது "ஒரு அசுத்த ஆவி" என்று அழைக்கப்படுகிறது.

115. நினைவில் கொள்ளுங்கள், அவர் கள் ஒரு நாளிலே, “இந்த மனிதன் பெயல் செபூலினாலே இதைச் செய்கிறான்” என்று கூறின போது இயேசு அவர்களிடம், "எனக்கு விரோதமாக நீங்கள் சொல்கிறீர்களே, அது உங்களுக்கு மன்னிக்கப்படும். ஆனால் ஒரு நாளிலே பரிசுத்த ஆவி வந்து இதே காரியத்தைச் செய்யும். அதற்கு விரோதமாக ஒரு வார்த்தை சொல்லப் பட்டால் கூட அது

மன்னிக்கப்படுவதில்லை” என்று கூறினார். உங்களுக்குப் புரிகின்றதா. அழுக்குப் படிந்த பாதத்துடனே இயேசு, உங்களால் அதை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? தேவனை நேசிக்கின்றோம் என்று கூறிக் கொள்ளும் மக்கள் தங்கள் ஸ்தாபனக் கோட் பாடுகளிலும் மற்றும் தங்கள் ஸ்தாபனங் களின் முறைமைகளிலும் மிகவுமாக ஊறிக் கலந்திருப்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றதா?

116. "உங்கள் பாரம்பரியங்களினாலே தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள்” என்று இயேசு கூறினார். அதோ அங்கே அவர் இருந்தார், வார்த்தையும் அங்கே மெய்நிலை யில் இருந்தது, ஏனென்றால் அது மாம்ச மாக்கப்பட்டு அவர் தான் கிறிஸ்து என்று சரியாக நிரூபிக்கப்பட்டிருந்தது. மக்களும் தங்கள் பாரம்பரியங்களைக் கொண்டு வார்த்தையானது மற்ற மக்களுக்கு பலனை

அளிக்கும்படிக்கு விடவில்லை. அதைத்தான் அவர் செய்துக் கொண்டிருந்தார், வார்த்தை எப்படிப்பட்டது என்று காண்பிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார், பாருங்கள். அவர் ஒரு தீர்க்கதரிசி என்று அவர்கள் விசுவாசிக்கவில்லை.

117. ஆனால் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று வேதாகமம் கூறியிருந்தது, வேதாகமமானது, "உன் தேவனாகிய கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணுவார்" என்று மோசே கூறினான் - உபாகமம் 18 : 15 - அவர் என்ன செய்வார் என்று வேதாகமம் சரியாக முன்னுரைத்திருந்தது. இதோ அவர் வந்து அதை அந்த மக்களின் மத்தியில் செய்துக் கொண்டிருந்தார்.

118. ஆகவே அன்றைக்கு இயேசுவுக்கு எப்படி ஒரு அவப்பெயரானது இருந்ததோ அதே போல இன்றும் ஒரு அவப்பெயர்

இருக்கும்படிக்கு நாம் அவரை அப்படியே விட்டு விட்டோம். இன்று மக்கள் அதற் கெதிராக காரியங்களை கூறும்படிக்கு செய் துள்ளோம். வேதாகமமானது, "அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று கூறியிருக்க“அற்புதங்களின் நாட்கள் கடந்து சென்று விட்டது. அதைப்போன்ற ஒரு காரியமானது கிடையவே கிடையாது” என்கின்றனர். நாமோ அதற்காக நின்று அதைக்குறித்து ஏதாவதொன்றைக் கூற இன்னுமாக நாம் வெட்கப்படுகின்றோம். நாம் விசுவாசிக்கின்றோம் என்று உரிமை பாராட் டுகின்ற அதைக்குறித்த நம்முடைய சாட்சி யைச் சொல்ல நாம் வெட்கப்படுகிறோம். அவரைக் கழுவி சுத்தப் படுத்து வதற்கு பதிலாக, அவர் இங்கே இருக்கின்றார் என் பதற்காக ஆனந்த கண்ணீரால் அவருடைய பாதைத்தைக் கழுவ முயற்சிக்காமல், அவர் அப்படியே அழுக்காக உட்காரும்படிக்கு

கண்டுங்காணாமல் விட்டுவிடுகிறோம். ''அதற்கும் எனக்கும் எந்த ஒரு சம்பந்தமும் கிடையாது. அதைப் போன்ற ஒன்றிற்கு என்னுடைய ஒத்துழைப்பை நான் கொடுக்க மாட்டேன், அதன் மேல் என் கைகளைக் கூட நான் போடமாட்டேன். பாருங்கள்?

119. அதே போன்று தான் உள்ளீர்கள். வேறொரு பெயரில் உள்ள அதே பரிசேயர் கூட்டம். அதே காரணத்தால் தான் நாம் அவர் அப்படியே உட்கார்ந்துக்கொண்டிருக்கும் படிக்கு மறுபடியுமாக நாம் செய்திருக்கி றோம். அவர் ஒரு தீர்க்கதரிசி என்று நாம் விசுவாசிப்பதில்லை. நாம் அவரைக் குறித்து வெட்கமடைகிறோம். ஏன்? அதே காரணம் தான். நாம் அதை விசுவாசிப்பதில்லை, மக்களும் கூட..... இல்லை ஐயா.

120. அவர் வந்து அவர் விரும்புகின்ற எதையுமே செய்யலாம். அவர்களோ தங்கள்

வழிகளில் நன்றாக அமைந்து பொருந்தி விட்டனர். அவர்களோடு எந்த ஒரு காரி யத்தையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்தவிதமாகத்தான் அவர்கள் இருப்பார்கள் என்று வேதாகமம் கூறியுள்ளது உங்களுக்குத் தெரியுமல்லவா? சரியாக அப்படித்தான். அவர்கள் அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாகவும் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப் பார்கள் என்று வேதாகமம் கூறியுள்ளது, பாருங்கள். அது சரியே.

121. அங்கே இருக்கின்ற கல்வியறிவு கொண்ட, மெருகேற்றப் பட்ட குழுவுடன் நாம் சேர்ந்து, நமக்கு ஒரு பெரிய சமுதாய அந்தஸ்தை மற்றும் நல்ல தருணங்களையும் அனுபவிக்கிறோம். மிக அழகாக அலங்கரிக் கப்பட்டு, ஜோடிக்கப்பட்டிருக்கின்ற மிக அருமையான சபைகளை நாம் கொண்

டிருக்கிறோம். அந்த சூழலில் இயேசு கிறிஸ்து உள்ளே வரும் போது அவர் அழுக்காகவே இருக்கும்படிக்கு நீங்கள் அப்படியே விட்டு விடுகிறீர்கள். வார்த்தையானது நம் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டாலும் கூட, நாமோ அப்படியே தொடர்ந்து சென்று மக்கள் அதைக்குறித்து பேசும்படிக்கு அப்படியே விட்டு விடுகின்றோம், ஓ. என்னே!

122. அதை நீங்கள் அறிவீர்கள், நாம் தியானித்துக் கொண்டிருக்கின்ற சம்பவத்தை சற்று துரிதமாகக் பார்க்கும்படிக்கு இன்றிரவு காட்சியை மாற்றுவோமாக. நம்முடைய படமெடுக்கும் கருவிகளை, காமிராக்களை வேறு பக்கமாக திருப்புவோம் - அங்கே ஒரு சிறு குறுந்தெருவில், ஒரு சிறிய அசுத்தமான சிறிய தெருவில், அங்கே தெருவில் உள்ளே ஒரு வீட்டின் மேலே ஒரு சிறிய பழைய அறை இருந்தது. அதன் வாசல் ஒரு சிறு கட்டையால் தடுக்கப்பட்டிருந்தது. அந்த

அறையின் கதவு திறக்கின்றது. ஒரு ஸ்திரீ வெளியே வருகின்றாள். உம், மக்களின் மத்தியில் அவள் மிகவுமாக நேசிக்கப்படாத ஒரு ஸ்திரீயாக அவள் இருந்தாள். அவள் ஒரு பாவியாக இருந்தாள், தவறான வழியில் தன்னுடைய பிழைப்பை அவள் நடத்திக் கொண்டிருந்தாள். ஆகவே அவள் சற்று உலாவுவதற்காக கிரீச்சென்று ஒலியெழுப்பின அந்த பழைய மரப்படிக்கட்டுகளில் கீழே இறங்குகிறாள். அவள் அந்த சிறு சந்தில் நுழைகிறாள். அங்கே இருந்த குப்பைத் தொட்டிகள் எல்லாவற்றையும் கடந்து செல்கிறாள், பிறகு அங்கே தெருவில் செல்கிறாள்.

123. அங்கே யாருமே இல்லாதிருந் தார்கள். ஆகவே என்ன நடந்தது என்று அவள் சற்று யோசிக்க ஆரம்பித்தாள். "ஓ, இப்பொழுது என் நினைவிற்கு வருகிறது. அங்கே இருக்கின்ற அந்த பரிசேயன்,

பாஸ்டர் பரிசேயன் ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் செய்துள்ளாரே, எல்லோரும் அங்கே சென்றிருக்கின்றனர். ஓ இன்றைக்கு வருமானம் மிகக்குறைவாக இருக்குமே." ஆகவே அவள் அங்கே தெருவில் சாவகாச மாக செல்கின்றாள், மெதுவாக நடக்க ஆரம் பிக்கின்றாள், "சரி, அந்த விருந்து முடியும் வரைக்கும் நாம் காத்திருக்க வேண்டும்" என்று அவள் கூறுகிறாள். அவள் மிக மோசமான ஒரு வழியில் தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தாள். ஆகவே அவள் தெருவில் நடந்து செல்கிறாள்.

124. சிறிது நேரம் கழித்து அவளுடைய பசி கொண்ட வயிறானது ஆட்டு இறைச்சி வறுவலின் வாசனையை நுகர்ந்தது, "ஓ, அது மிக அருமையாக உள்ளதே. அதைப் போன்ற ஒன்றை என் வாழ்க்கையில் நான் சாப்பிட் டதே கிடையாதே" என்று அவள் நினைத்

தாள். ஒருக்கால் அவள் தன்னுடைய பெற்றோரால் தெருவில் விடப்பட்டிருக்கலாம்.

125. நாம் அநேக முறைகள் சிறு பிள்ளைகள் குற்றம் புரிதலைக் குறித்து நினைப்பதுண்டு என்று உங்களுக்குத் தெரியும். அது சிறு பிள்ளைகள் குற்றம் புரிதல் அல்ல, அது முழுவதுமாக பெற்றோர் குற்றம் புரிதலே ஆகும். பிள்ளைகளுக்கு ஜெபிக்கவும், தேவனுக்கு ஊழியம் செய்யவுமே கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அம்மா எங்கோ ஓரிடத்தில் சீட்டு விளையாடும் விருந்திற்கும் (அவளுடைய மதப்பிரகாரமான சீட்டுக்கட்டு விருந்து) அப்பா எங்கோ ஓரிடத்தில் உள்ள கோல்ஃப் (Golf) பந்து விளையாடும் மைதானத்திலும், உடன் பிறந்த சகோதரி ஒரு வாலிபனுடன். தெருவில் சென்று ஓடிக் கொண்டு .... ஒருக்கால் அவர்கள் பழமை

நாகரீக ஜெபப் பீடத்தையும், சீட்டுக்கட்டு களுக்கு பதிலாக வேதாகமத்தையும் வீட்டில் வைத்து, நீண்ட காலத்திற்கு முன்னரே தொலைக்காட்சி பெட்டியை வீட்டின் கதவிற்கு வெளியே தூக்கி வீசி எறிந்திருந் தால் காரியமானது சற்றும் வித்தியாச மானதாக இருந்திருக்கும். அவ்விதமாகச் செய்வது ஒரு பெரிய வித்தியாசத்தை உண்டாக்கியிருக்கும். ஒரு சினிமாபடக் காட்சிக்கு நீங்கள் எல்லோரும் சென்றால் தவறான ஒன்றாகக் கருதப்படும். ஆகவே பிசாசு அதை சரியாக நம் முன்னே வைத்து விட்டான்; அவன் அதை நேராக வீட்டிற் குள்ளாகவே கொண்டு வந்து வைத்து விட்டான். பாருங்கள்? பாருங்கள்?

126. அவள் பசியாக இருந்தாள். அவள் அந்த ஆட்டிறைச்சி வறுவலின் வாசனையை முகர்ந்தாள். அவள், "ஓ, அதன் வாசனை மிக அருமையாக இருக்கிறதே, வாசனையே

இவ்வளவு அருமையாக இருக்குமானால் ஆட்டிறைச்சியின் பொரித்த துண்டானது ஒரு மனித வாய்க்குள் எவ்வளவு ருசியாக இருக்கும். அதன் ருசி எப்படி இருக்குமென்று எனக்குத் தெரியாது. நான் இன்னும் சற்று நடப்பேனாக" என்று அவள் கூறிக்கொண் டாள்.

127. இப்பொழுது, அவள் அந்த மனிதருக்கு மிக அருகாமையில் அவளாலே செல்ல முடியாது, ஏனென்றால் அவள் அருவருக்கத்தக்க கறைபடிந்த ஒரு ஸ்திரீ யாவாள். அம்மனிதரோ சுய நீதி பரிசுத்த மிக்கவர்கள் ஆவர். ஆகவே அவர்களால்..... அவர்கள் இருந்த இடத்தினருகில் அவளாலே செல்ல முடியவில்லை. அவள் ஒரு பாவி என்று கருதப்பட்டாள்.

128. என்ன நடக்கிறதென்று பார்க்கும் படிக்கு அவள் சற்று அருகாமையில் நடந்து

சென்றாள், அவர்கள் எல்லோரும் அங்கே நின்றுக்கொண்டிருப்பதை அவள் கண்டாள். அவர்கள் மலைத்துப்போய் அங்கே எண்ணெயில் இந்த செம்மறி ஆட்டிறைச்சியானது (ஆட்டுக்கடா) பொரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர்களுடைய வாயிலிருந்து உமிழ் நீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது; மிக அருமையான உணவு வகைகள் அங்கே தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. என்ன அருமையான ஒரு தருணமாக அது இருந்தது!

129. அவள் ஜனக்கூட்டத்திற்குள்ளாக இந்த விதமாக உற்று நோக்க ஆரம்பித்தாள், அப்பொழுது அவளுடைய கண் பார்வை இயேசுவின் மீது பட்டது. "அவர் யார்? அவருடைய பாதமானது அழுக்காக உள்ளதே. அவர் என்று எனக்கு.... அவர் யாரென்று எனக்கு யாராவது சொன்னால்

நலமாக இருக்குமே? ஐயா, அவர் யாரென்று ....?" சட்டென்று அந்த ஆள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் - அவளுடன் எந்த ஒரு தொடர்பும் கொள்ளக்கூடாது என்று விரும்பினான். அவள் ஒரு பாவியாவாள். கடைசியாக வேறு ஒருவரை கேட்கின்றாள், அங்கே ஒரு சிறு பெண் விசுவாசித்துக் கொண்டு இந்த ஸ்திரீ பார்த்துக்கொண் டிருந்தபடியே அவளும் பார்த்துக் கொண் டிருந்தாள். அவளிடமாக, "அம்மா, தயவு கூர்ந்து என்னை மன்னிக்கவும். அங்கே ஒரு மனிதன் உட்கார்ந்திருக் கின்றாரே, அவர் யார்? அப்படிப்பட்ட ஒரு நபர் .... அவர் யார்?" என்றாள்.

130. ''ஆம், அவர் யார் என்று உனக்குத் தெரியுமல்லவா? தீர்க்கதரிசி என்று நம்பப் படுகின்ற, நசரேயனாகிய இயேசுவைக் குறித்து அவர்கள் பேசுவதை நீ கேட்ட தில்லையா? என்றார்கள்.

"ஓ, ஆமாம். அஹ் - அஹ். அங்கே இருப்பவர் அவர் தானா?"

"அவரே தான்"

131. "அப்படியா, அவர் கழுவப்படவே யில்லையே, அங்கே உள்ளே செல்கின்ற ஒவ்வொருவரும் கழுவப்பட்டு தைலத்தால் அபிஷேகிக்கப்பட்ட பிறகு தான் உள்ளே செல்ல வேண்டும் என்று நான் அறிந்திருக் கிறேன். ஆனால் அவரைப் பாருங்கள். அவரை கழுவாமல் அப்படியே விட்டிருப்பது சரியல்ல."

132. அவளுக்கென அளிக்கப்பட்ட அந்த தருணத்தை அவள் கொண்டிருந்தாள். யாரோ ஒருவர் கூறியிருந்த ஒரு சம்பவமானது அவளுடைய நினைவிற்கு வந்தது. ஒரு காலத்திலே சீகார் பட்டிணத்தில் இருந்த சமாரியாவில் தன்னைப் போலவே விபச்சாரத்

தொழிலில் இருந்த ஒரு பெண்ணினுடைய ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்பட்டிருந் தது. ஆகவே இவளுக்கும் ஒரு தருணமானது அளிக்கப்பட்டிருக்கின்றது என்று அவள் உணர்ந்துக் கொண்டாள். ஆனால் இப்பொ ழுது எப்படி அவரிடமாக அவளால் செல்ல முடியும்? அவருக்கு தேவை ஒன்று உள்ளது என்பதை அவள் கண்டாள், அவருக்கு பணிவிடை செய்ய அவள் விரும்பினாள். ஆனால் அவரிடமாகச் செல்ல முடிய வில்லை. அப்படித்தான் காரியமானது இருந் தது. அப்பொழுது அவள், “நான் என்ன செய்வது? அவருக்கு தைல அபிஷேகம் பண்ணப்படவில்லை, அவருடைய பாதங்கள் அழுக்காக உள்ளது. யாரும் அதைக்குறித்த கவனத்தைக் கொள்ளவே இல்லை. ஓ, நான் மாத்திரம் அங்கே செல்வேனானால், அது தான் உண்மையான மனந்திரும்புகின்ற இரு

தயமாகும். என்னால் அங்கே செல்ல முடியும் என்றால்...'' என்று அவள் நினைத்தாள்.

133. இப்பொழுது அவள் நினைக்கின் றாள். அவளுடைய மனதிற்கு ஒன்று தோன்று கிறது. "நான் என்ன செய்யப் போகிறேன் என்று தெரியுமா? எனக்குத் தெரியும்.”

134. தெருவில் செல்கின்றாள். அவளால் முடிந்தவரைக்கும் வேகமாகச் செல்கிறாள் - அங்கே சிறு சந்திற்குள் செல்கின்றாள். அந்த பழையக்ரீச்சென்னும் ஒலி எழுப்புகின்ற மரப்படிகளின் மேல் ஏறுகின்றாள், கதவை திறந்து உள்ளே சென்று, மேலே இருக்கின்ற ஒரு பையை இழுத்து அவளிடமாக எவ் வளவு பணம் இருக்கின்றது என்று பார்க்க பணத்தை எண்ணினாள். அவள், 'அபிஷே கிக்கும் தைலம் வாங்க இவ்வளவு பணம் போதுமா? தேவையான பணம் உள்ளதா என்று பார்க்கலாம். இருபது ரோம தினசரி

காசுகள் உள்ளன. ஒருக்கால் இது போது மானதாக இருக்கலாம். சற்று பொறு. என்னால் அதை செய்ய முடியாது. அவர் ஒரு தீர்க்க தரிசி ஆவார், இந்த பணம் எனக்கு எப்படி கிடைத்ததென்று அவருக்கு தெரிந்து விடும். எந்த விதத்தில் இந்த பணத்தை சம்பாதித் தேன் என்று அவர் அறிந்து கொள்வார். என்னால் இதை செய்ய முடியாது' என்று கூறிக்கொண்டாள். ஆகவே, ஒருக்கால் அவள் பணத்தை திரும்ப உள்ளே வைத் திருப்பாள்.

135. அவள் பணத்தை உள்ளே வைத்த போது, ஏதோ ஒன்று அவளுடைய இருதயத் தில் பேசிக்கொண்டே இருந்தது, "ஓ அவர் அங்கே அழுக்காக அப்படியே உட்கார்ந் திருக்கும்படிக்கு விட்டுவிடுவாயா? உன்னு டைய பாவங்களை எடுத்து போடக்கூடிய ஒரே மனிதனாகிய அவருக்கு உன்னால் பணிவிடை செய்ய முடியும் என்கின்ற போது

அவர் அந்த இடத்தில் அழுக்காக அப்படியே உட்கார்ந்திருக்கும்படிக்கு விடப்போகி றாயா?” என்று கூறினது.

அப்பொழுது அவள் “சரி,. அவருக்கு தெரிகிறதோ, அல்லது தெரியாமல் போகி றதோ, எப்படி இருந்தாலும் சரி, நான் போகப் போகிறேன்” என்று தனக்குள்ளாகக் கூறிக் கொள்கிறாள்.

136. அவள் தெருவில் சென்றாள், ஒரு அங்காடிக்குள்ளாகச் செல்கின்றாள் .... அங்கே நீண்ட கொக்கி போன்ற மூக்கைக் கொண்ட ஒரு ஆள் உட்கார்ந்துக் கொண் டிருக்கிறான், "சரி, உனக்கு இங்கே என்ன வேலை, என்ன வாங்கப் போகிறாய்?" என்று கேட்டான்..

137. அப்பொழுது அவள், “உங்களிடம் இருப்பதிலேயே சிறந்த தரமுள்ள பரிமள

தைலமுள்ள வெள்ளைக்கல்பரணி எனக்கு வேண்டும், மலிவான விலை கொண்ட ஒரு தைலமல்ல; சிறந்த தைலம் எனக்கு வேண்டும்" என்று கேட்டாள். அவளுக்கு ஒரு விசேஷித்த காரணம் ஒன்று இருந்தது.

138. அதைப்போன்று தான் நாமும் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்மிடமுள்ள சிறந்ததை அவருக்குக் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம், நாம் எப்படி இருக்கின்றோமோ அந்த எல்லா வற்றையுமே அளிக்க வேண்டும், நமக்கு வயதாகி மரித்துக் கொண்டிருக்கும் போது நம்மை அவருக்கு அளிப்பதல்ல; நம்முடைய வாலிப வாழ்க்கையை அவருக்கு அளிக்க வேண்டும். நம்மிடம் இருப்பதிலேயே சிறந் ததை அவருக்கு அளிக்க வேண்டும்.

139. அதோ அங்கே பாருங்கள், சிறந்த ஒன்றை அவள் வாங்கினாள். அவள் மேலே

சென்று "எவ்வளவு பணம் இருக்கிறதென்று பார்க்கலாம்" என்றாள். கடைக்காரன், "இதை வாங்குவதற்கு முதலாவதாக உன்னிடம் பணம் இருக்கின்றதா" என்று கேட்டான். அந்த ஸ்திரீ எப்படிப்பட்டவள் என்று அவனும் கூட அறிந்திருந்தான். அதனால் தான் அவன். ஆம், அவளிடமாக பணம் இருந்தது. "இதை எடுத்துக் கொண்டு எங்கே செல்லப் போகின்றாய்?"

''ஒரு விசேஷித்த காரியத்திற்காக நான் வாங்கிச் செல்கிறேன்."

140. அவள் புறப்பட்டுச் செல்கின்றாள். ஆனால் அவளுக்கு எந்த ஒரு அழைப்பும் கொடுக்கப்படவில்லை. ஆகவே எப்படி அவள் உள்ளே செல்லப்போகிறாள்? நீ இயேசுவுக்கு ஊழியம் செய்ய விரும்பினால், உள்ளே செல்லத்தக்கதாக எப்படி யாயினும் அவர் ஒரு வழியை உனக்கு உண்டு

பண்ணுவார். எப்படியோ ஒரு விதத்தில் அவள் உள்ளே சென்றாள்.

141. அங்கே இயேசுவானவர் இன்னுமாக உட்கார்ந்துக் கொண்டிருந்தார். அவள் அங்கே உள்ளே சென்ற உடனே அவளுடைய இருதயம் மிக வேகமாக அடிக்கத் துவங்கினது. ''ஓ என்னே! என்னை சந்திக்க மனமில்லாமல் அவர் என்னை திருப்பி விட்டால் என்ன ஆகும்?" என்று அவள் நினைக்க நேர்ந்தது. அவள் நினைப்பதற்கு அநேக காரியங்கள் இருந்தன.

"அவர் இங்கே வந்து, 'நடத்தை கெட்ட ஸ்திரீயே, இங்கே என் பிரசன்னத்தில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நான் தேவனுடைய குமாரன் என்று உனக்குத் தெரியாதா? நீ இங்கே என்னுடைய பிரசன்னத்தில் இருக்கவே கூடாதல்லவா? என்று சொல்வாரானால், ''அவளுக்கு ஏறக்குறைய மாரா

டைப்பே வந்து விட்டது. அப்பொழுது அவள், ''நான் என்ன செய்வது? ஆனால் அவருக்கு அருகில் நான் சென்று தானாக வேண்டும். இந்த தருணத்தை நான் விட்டு விடக்கூடாது. ஒருக்கால் எனக்கு இருக்கும் கடைசி தருணமாக இது இருக்கலாம்” என்று அவள் நினைத்தாள். உங்களுக்கும் கூட ஒரு கடைசி தருணமாக இருக்கக்கூடும் (ஒலி நாடாவில் காலியிடம் - ஆசி).

142. அவள் இயேசுவைப் பார்த்தாள், அவளுடைய இருதயம் வெடிக்கும் அள விற்கு ஆனது. அவள் - அவள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கின்றாள் என்பதை அவள் அறிந்திருந்தாள். நீங்கள் அவருடைய பிரசன்னத்திற்குள் செல்லும் போது ஏதோ ஒன்று சம்பவிக்கின்றது. அவள் கண்களி லிருந்து கண்ணீர் அவள் கன்னத்தில் வழிந் தோடுவதை அவள் கவனித்தாள், அவள் தன் கையில் தைலப்பெட்டியை வைத்து நின்றுக்

கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் அவருடைய பாதத்தில் விழுந்தாள். அப் பொழுது அவள், "என்னால் மேல்நோக்கிப் பார்க்க முடியாது. நான் மிக அசுத்த முள்ளவளும் குற்ற உணர்வு மிக்கவளாக இருக்கிறேன். என்னால் மேலே நோக்கிப் பார்க்க முடியாது" என்று நினைத்தாள். அவள் அழ ஆரம்பித்தாள். அவளுடைய கண்ணீர் அவருடைய பாதத்தின் மேல் விழ ஆரம் பித்தது. அப்பொழுது அவள் அவளுடைய பாதங்களை தன்னுடைய கைகளால் அந்த விதமாக கழுவ ஆரம்பித்தாள் - கண்ணீரை அவருடைய பாதத்திலிருந்து துடைக்க முயன்று, அவருடைய கால்களை தன்னு டைய கண்ணீரால் கழுவ ஆரம்பித்தாள். ஆகவே சிறிது நேரம் கழித்து ....

143. அவருடைய பாதத்தை துடைக்க எந்த ஒரு துவாலைத் துண்டையும் அவள் வைத்திருக்கவில்லை. அப்பொழுது அவளு

டைய தலைமயிரானது கீழே தொங்கிக் கொண்டிருந்தது. உடனே அவள் அவருடைய பாதத்தைத் தன் தலைமயிரால் துடைக்க ஆரம்பித்தாள்.

144. அவ்விதம் செய்வதற்கு நம்முடைய சகோதரிகளுக்கு நேரம் இருக்கிறதா? இன் றைக்கு அப்படிச் செய்ய முயல்வார்க ளானால், அதைச் செய்வதற்கு அவர்கள் தலைகீழாக நிற்க வேண்டும். தங்கள் தலைகளை தங்கள் கால்களைப் போல் உபயோகித்துத் தான் நிற்க வேண்டும். தேவன் தம்முடைய எல்லா வாக்குத்தத் தங்களையும் காத்துக்கொள்ளுகிறார் என் பதை ஸ்திரீகள் உணர்கிறார்களா என்று நான் அதிசயிக்கிறேன். கத்தரிக்கப்பட்ட தலை மயிருடன் நீங்கள் உள்ளே வருவதானது முற்றிலுமாக முடியாததாகும் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. அவர் தம்முடைய எல்லா

வாக்குத்தத்தங்களையும் காத்துக் கொள்கிறார். நீங்கள் உங்கள் தலைமயிரை கத்தரிக்கும் போது நீங்கள் செய்வது என்ன என்பதை நீங்கள் உணர்கிறீர்களா? நீங்கள் வல்ல மையை நிராகரிக்கிறீர்கள். ஒரு ஸ்திரீ தன்னுடைய தலை மயிரைக் குட்டையாக கத்தரித்து வைத்துக்கொண்டால் அவள் ஜெபிக்கவும் கூட முடியாது என்று வேதா கமம் கூறுகிறது. தன் தலை மயிரைக் கத்தரிக்கும் போது தன்னுடைய புருஷனை கனவீனப்படுத்துகிறாள்.

145. ஆகவே நினைவில் கொள்ளுங்கள், ஒரு ஸ்திரீ தேவனுடைய கற்பனையில் ஒன்றைக் கைக்கொள்ளாததினால் இந்த எல்லா காரியங்களும் நடக்கும்படியாக ஆனது. ஒன்றை மாத்திரமே கைக்கொள் ளாமல் மற்றவற்றைக் கைக்கொள்வது உங் களை உள்ளே கொண்டுசென்று விடும் என்று எண்ணு கிறீர்களா? அதைக்குறித்து சற்று

சிந்தியுங்கள்! ஒருக்கால் ஊழியக்காரர்கள் சில சமயங்களில் இதைக் கூற போதுமான தைரியம் கொள்ளாதவர்களாக இருக்கலாம். இந்த ஒரு முறை இதை நீங்கள் கேட்கப் போகிறீர்கள். இது சத்தியமாகும்.

146. யாரோ ஒருவர் வந்து, "ஏன் நீங்கள் பெண்களைப்பற்றி பேசாமல் அப்படியே விட்டுவிடக்கூடாது?'' என்றார். சில காலத்திற்கு முன்னர் ஒரு மகத்தான மனிதன் என்னிடமாக, "ஆம், அவர்கள் உங்களை ஒரு தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறார்கள். எப்படி பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும் என்றும் இந்த மற்ற பெரிய காரியங்களை எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்றும் எப்படி ஒரு தீர்க்கதரிசிகளாக இருப்பது என்பதைக் குறித்து நீர் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாமே” என்றும் இன்னும் பிறவற்றையும் கூறினார்.

147. அதற்கு நான், "அவர்களுக்கு மகத் தான காரியங்களை போதிப்பதா? அவர்க ளுக்கு முதல் மூன்று எழுத்துக்களான ABC கூட தெரியாதிருக்கையில் எப்படி என்னால் அவர்களுக்கு அல்ஜீப்ரா கணக்கைக் கற்றுக் கொடுக்க முடியும்” என்று கூறினேன். அது என்ன காண்பிக்கிறதென்றால் வெளிப்புறமாக வெளிப்படுவதானது உள்ளே என்ன இருக் கிறதென்பதைக் காண்பிக்கிறதாகும். ஆனால் எப்படியாயினும், நீங்கள் தொடர்ந்து சென்று அதைச் செய்து கொண்டேயிருங்கள். என்ன? அதைக் குறித்த கவனம் உங்களுக்கு இல்லை.

148. அதோ அங்கே அவள் இருக் கின்றாள். அவள் தன் தலைமயிரைக் கொண்டு அவருடைய பாதத்தைத் துடைக்க ஆரம்பித்து அவருடைய பாதத்தை சுத்தம் செய்து ஈரம் காய்ந்து உலர்ந்து போகும் படிக்குச் செய்தாள். அவள் மிகவுமாக பயந்

திருந்தாள். சிறிது நேரம் கழித்து இந்த பரிமள தைல குப்பியை எடுத்து அதை உடைத்தாள். அவள் அதை உடைத்து அதிலிருந்து ஒவ்வொரு சொட்டையும் அவருடைய பாதத்தில் ஊற்றினாள். அவள் அழுது கொண்டிருந்தாள். அவள் அழும் போதெல்லாம் அவள் குனிந்து அவருடைய பாதத்தை முத்தமிட்டாள். அவள் மிகவுமாக உணர்ச்சி பொங்க கதறி அழுதாள்.

149. நீங்கள் அவருடைய பிரசன்னத்திற்குள் செல்லும் போது, அது உங்களை உணர்ச்சி பொங்க கதறச் செய்யும். நானும் அவ்வாறு தான் கதறினேன்! அவரை விசுவாசித்து, அவரில் விசுவாசம் கொள்ளும் எந்த ஒரு மனிதனும் அவருடைய பிரசன்னத்துக்குள் செல்வானானால், அது உணர்ச்சி பொங்க கதறி அழச்செய்யும். பெந்தெகொஸ்தே நாளிலே அவர் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் வந்த போது அவர்கள் எல்லோரும்

கதறினார்கள். நீங்கள் உண்மையாக விசு வாசித்து, அதை அறிந்து, அது உங்களுக்கு அளிக்கப்பட்ட தருணமாகும் என்று கண்டு கொண்டு அவருடைய பிரசன்னத்தில் நீங்கள் இருக்கும் போது, அதைக் குறித்து நீங்கள் நிச்சயமுடையவர்களாக இருப்பீர்கள்.

150. அவள் சென்றாள் . . . (சகோதரன் பிரன்ஹாம் முத்தமிடுகிற சத்தங்களை இடு கின்றாள் - ஆசி), அவருடைய பாதைத்தை முத்தமிட்டாள். அழுதாள், கழுவினாள், சுத்தமாகத் துடைத்தாள், (சகோதரன் பிரன் ஹாம் முத்தமிடுகிற சத்தத்தை இடுகின்றார் - ஆசி), மறுபடியுமாக அவருடைய பாதத்தை முத்தமிட்டாள். இயேசு தாமே தம்முடைய ஒரு காலை அசைத்திருப்பாரானால் அவள் குதித்தெழுந்து ஓடிப் போயிருப்பாள் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் என்ன ஆயிற்று தெரியுமா, அவள் அதைச் செய்

யும்படிக்கு அவர் அப்படியே உட்கார்ந்துக் கொண்டார்.

151. உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் அவருக்கு ஏதாவதொன்றைச் செய்வதற்கு விருப்பங்கொண்டால், நீங்கள் அதைச் செய்யும்படிக்கு அவர் விடுவார். எல்லாம் ஒழுங்கிற்கு மாறாக இருந்தாலும்கூட எப்படி யாயினும் நீங்கள் செய்யும்படிக்கு அவர் விடுவார். ஆகவே அவர்.....

152. அது அவருக்கு ஒரு சேவை செய்தலாகும். அவள் அவருடைய பாதத்தை கழுவிக்கொண்டிருந்தாள். அவர் அங்கே உட்கார்ந்து அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அவள் மேல் நோக்கிப் பார்க்க பயந்தாள், ஏனென்றால் அவரைப் பார்ப்பா ளானால் அவள் பயந்து ஓடிப்போய் விடுவாள். பாருங்கள். அவள் அவருடைய பாதத்தைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவ

ருக்கு ஏதாவதொன்றைச் செய்யும்படியாக தருணம் இது தான் என்று அவள் கண்டு கொண்டாள். அதனால் அவள்... இப்பொழுது பாருங்கள், அவள்...

153. இயேசு அந்த பரிசேயனுக்கு பதி லளிக்கையில், அந்த ஸ்திரீயின் கிரியை களைச் சுட்டிக்காட்டி அவளை நீதிமானாக்கப் பட்டவளாக (Justified) நிறுத்தினார். அவ ளைத் தாமே நீதிமானாக்கப்பட்டவளாக ஆக்கினார், அவளுடைய விசுவாசத்தைக் கொண்டு அவளை நீதிமானாக்கினார், “உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது," அவளு டைய கிரியைகள் என்னவென்று அந்த பரிசேயனுக்கு அவர் காண்பித்தார்.

154. ஏனென்றால், உங்கள் கிரியைகள் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துகின் றது. உங்கள் தலைமயிரை வளரவிடுங்கள்! அஹ்! சரி. இப்பொழுது, பாருங்கள், நீங்கள்

விசவாசிக்கிறீர்களா அல்லது இல்லையா என்று அது வெளிப்படுத்திக் காட்டுகின்றது. அது தேவனுடைய வார்த்தையாகும். சத்தி யத்தைத் தவிர வேதாகமத்தில் வேறொரு வசனமானது கிடையாது. அப்படியானால் நீங்கள் ஏன் அதைச் செய்கிறீர்கள்? இப்பொ ழுது கவனியுங்கள். பெந்தெ கொஸ்தேயில் ஹாலிவுட் மிக அதிகமாக உள்ளது. அது தான் காரணமாகும். இப்பொழுது நாம் காண்பது என்னவெனில் .... அது தான் உண்மையாகும் - அதில் ஹாலிவுட் காரியங்கள் மிக அதிக அளவில் உள்ளது. நீங்கள் அந்த காரி யங்களைப் பார்த்து அதை மாதிரியாக வைத்துக்கொண்டு அதன்படியே உங்களை அமைத்துக் கொள்கிறீர்கள்.

155. சிறிது காலத்திற்கு முன்னர் ஒரு பெண் (அவள் மிக இருக்கமான ஆடையை அணிந்திருந்தாள்) என்னிடமாகப் பேசினாள் ... நான், "நீங்கள் ஒரு சகோதரியாக

இருக்கிறபடியால் அந்த ஆடையை அணி வதை நீங்கள் விட்டுவிடலாம் அல்லவா?" என்று கூறினேன்.

156. அதற்கு அவள், "அப்படியா, அவர்கள் வேறு எந்த ஆடைகளை தயா ரிப்பதில்லையே சகோதரன் பிரன்ஹாம்" என்றாள்.

157. அதற்கு நான், 'அவர்கள் தையல் இயந்திரங்களை தயாரிக்கிறார்கள் மற்றும் உபகரணங்களையும் கொண்டிருக் கிறார்கள் அல்லவா, ஆனால் நீங்கள் அதை அணிய விரும்புகிறீர்கள்" என்றேன், பாருங்கள்.

158. ஏன் அவ்விதம் செய்யக்கூடாது என்று நான் உங்களுக்குக் கூறுவேன். சகோதரிகளே, உங்களுக்கு இதை நான் கூறட்டும் (சபையார் கைகளைத் தட்டுகின் றனர்" - ஆசி) அஹ் - அஹ் உங்களுக்கு

நன்றி. என்றாவது ஒரு நாளிலே விபச்சாரம் செய்த குற்றத்துக்கு நீங்கள் பதில் சொல்லி யாக வேண்டும்.

159. நீங்கள், "ஓ, சகோதரன் பிரன்ஹாம், என்னால் முடிந்த வரைக்கும் என் கணவருக்கு நான் மிகவும் கற்புள்ளவளாக இருக்கிறேன்" எனலாம். "என் ஆண் சிநேகிதனுக்கு நான் உத்தமமாக இருந்து வருகிறேன்" அது உண்மையாகவே அப்படித்தான் இருக்கலாம்.

160. ஆனால் இயேசு "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று" என்று கூறியுள்ளார். ஆகவே நீங்கள் அந்தவிதமாக உங்களை வெளியே அங்கே காண்பித்தீர்கள், உங்களைக் கண்ட அந்த பாவி உங்களை அந்த விதமாகவே தன் எண்ணத்தில் வைத்து சிந்தித்துக் கொண் டிருக்கிறான், ஏனென்றால் நீங்கள் அந்த

விதமாகவே உங்களை வெளியே காண் பித்துக்கொண்டீர்கள். நியாயத்தீர்ப்பின் சமயத்திலே அவன் விபச்சாரக் குற்றத்திற்கு பதிலளிக்கும் போது, யார் குற்றவாளியாக இருப்பார்கள்? அதைக் குறித்துச் சற்று சிந்தியுங்கள்! அஹ் - அஹ் அது முற்றிலும் சரியே. ஓ, ஸ்திரீகளே! திரும்பி வாருங்கள், சகோதரிகளே, கிறிஸ்துவண்டை திரும்பி வாருங்கள். சகோதரர்களே, நீங்களும் அந்த விதமாகச் செய்யுங்கள். உங்கள் மனைவிகள் அந்த விதமாக செய்யும்படிக்கு விட்டு விட்டு உங்களை ஒரு மனிதன் என்றும், வீட்டிற்குத் தலைவன் என்று அழைத்துக் கொள்கிறவர்களே அஹ்-அஹ், கவனியுங்கள். நண்பனே, நாம் மிகப்பயங்கரமான ஒரு காலத்தில் இருக்கின்றோம், அதை நாம் கவனிக்கிறோம்.

161. ஆகவே இங்கே இந்த சிறிய பெண் இயேசுவின் பாதத்தை முத்தமிட்டு அவருடைய பாதத்தை கழுவி தன்னுடைய

தலைமயிர்களைக் கொண்டு அதைத் துடைத்தாள். திடீரென்று அங்கே அந்த ஓரத்தில் இருந்த பரிசேயன் அதை கவனிக்க நேர்ந்தது. ஓ என்னே! அவனுடைய நீதியான கோப மானது மேலெழும்பினது, அவனுடைய - அவனுடைய பெரிய தாடை வீங்க ஆரம் பித்தது. அவனுடைய முகமானது கோபத்தால் வெடித்துவிடும் போல இருந்தது. ஓ, என்னே! உடனடியாக அவன், "இங்கே வாருங்கள். அங்கே பாருங்கள்” என்றான்.

162. அவன் தன்னுடைய இருதயத்தில், அவனுடைய மனதுக்குள், "அந்த மனிதன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப் பட்டவளென்றும் அறிந்திருப்பாரே” என்று சொல்லிக் கொண்டான்

163. அவர் ஒரு தீர்க்கதரிசியா அல்லது இல்லையா என்று பார்க்கலாம். பாருங்கள்.

அவர் அந்த பரிசேயனுடைய இருதயத்தின் நினைவுகளை பகுத்தறிந்தார். உடனடியாக அவர் திரும்பினார். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்ப்பதற்கு எழுந்து கொண்டாள். அவளுடைய கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தது. அவர் திரும்பி அங்கே பார்த்தார், அவர் “சீமோனே” என்றார். அவர், "உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும்” என்றார். ஓ, என்னே! “இதோ சீமோனே பார். நான் உன்னிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நீ அழைத்ததின் பேரில் நான் இங்கே வந்துள்ளேன். நீ எனக்கு அழைப்பு விடுத்தாய். நான்வாசலண்டை வந்த போது நீ என்னுடைய கால்களைக் கழுவவில்லை. நான் உள்ளே வந்த போது நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை நான் உள்ளே அழுக்காக வரும்படிக்கு அப்படியே விட்டு விட்டாய். நீ எனக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் எனக்கு வரவேற்பின் முத்தஞ்

செய்யவில்லை. ஆனால் இங்கே இருக்கின்ற இந்த ஸ்திரீ - அவள் எப்படிப்பட்டவளா யிருந்தாலும் சரி - இவளோ தன் கண்ணீ ரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள், என் கால்களை அபிஷேகித்தாள், அவள் என் பாதத்தில் விழுந்த முதற்கொண்டு ஓயாமல் தொடர்ந்து முத்தஞ் செய்தாள்" என்றார். அவர் ஒரு தீர்க்கதரிசியா, இல்லையா என்று அப்பொழுது அவன் கண்டுகொண்டான்.

164. பிறகு அவர், "சீமோனே, நீ ஒன்றைக் காண வேண்டு மென்று நான் விரும்புகிறேன்" என்றார். மேலும் அவர், ''எந்தவிதமான ... நான் உனக்கு ஒரு விடு கதையை அளிக்க விரும்புகிறேன்" என்றார். அவர், "அநேகம் மன்னிக்கப்படும் போது அன்பு அதிகம் இருக்கும்" என்றார். அவர் இந்த பழமொழியை அவனிடம் கூறினார்,

அப்பொழுது சீமோன் அவருக்கு பதிலளித் தான்.

165. கவனியுங்கள், அவருடைய கால் களைக் கழுவும்படிக்கு சீமோன் அவருக்கு எதுவுமே கொடுக்கவில்லை. ஆனால் இருந்ததிலேயே மிகச் சிறந்த தரமான தண்ணீர் அவருக்கு இருந்தது. அதைக்குறித்து சற்று சிந்தியுங்கள். ஒரு மனந்திரும்புகிற பாவியின் கண்ணீர் இயேசுவின் பாதத்தில் இருந்த அழுக்கை கழுவி அகற்றினது, ஒரு பாவியின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீ ரானது இயேசுவின் பாதத்தில் இருந்த தூசியை கழுவி சுத்தமாக்கினது.

166. ஓ, இன்றிரவு உள்ள மனிதரே, ஸ்திரீகளே! சுவிசேஷத்தின் மேலே வருகின்ற நிந்தையை நீங்கள் காண்கையில், நாம் மிகவும் விறைத்துக் போனவர்களாக இருக் கின்றோம், நாம் அழுது கண்ணீர் சிந்தினால்

நம் முகத்தில் இருக்கின்ற ஒப்பனைகள், மேக் அப் எல்லாம் கலைந்து கறைந்து போய் விடும், அப்படியே தெருவில் சென்றால் பார்ப்பதற்கு நம்முடைய முகம் மிகவும் மோசமாக இருக்கும் என்பதால் அப்படியே அசைவற்று விறைத்து நிற்கின்றோம். ஆனால் அங்கே மறுமையில் பரலோகத்தில் நுழை வாயிலை நோக்கிப் பார்க்கும்போது எப்படிப் பட்டவர்களாக நீங்கள் இருக்கப் போகி றீர்கள்?

167. அதோ அங்கே அவள் இருந்தாள். அவள் அவருடைய பாதங்களைக் கழுவி னாள், அவருடைய பாதங்களை முத்தமிட் டாள், அவருடைய பாதத்திற்கு பரிமள தைலம் பூசினாள், தன்னால் முடிந்த எல்லா வற்றையும் அவள் செய்து கொண்டிருந்தாள். ஏனென்றால் அவளுக்கு மன்னிப்பு தேவைப் பட்டது. அவர் என்ன செய்யப்போகிறார்

என்று அப்பொழுது திடீரென்று அவளுக்கு அவளுக்கு யோசனையாயிற்று.

168. தாம் ஒரு தீர்க்கதரிசி என்று சீமோனுக்கு காண்பித்தார், அவனுடைய திட்டமானது அவனுக்கு எதிராகவே முடிந்தது, ஏனென்றால், "அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல" என்று அவன் கூறியிருந்தான். அவர் ஒரு தீர்க்கதரிசி என்றும் அவர் தான் தேவனுடைய வார்த்தை என்றும் அப்போது நிரூபிக்கப் பட்டது. இப்பொழுது அவன் அங்கே தன் முகம் கோபத்தால் வீங்கினவனாக அங்கே நின்றுக் கொண்டிருக்கிறான். அவன் அந்த சிறு பெண்ணைத் தன்கையால் பிடித்து இழுத்து சபையிலிருந்து அவளை அவனால் வெளியே தள்ள முடியும்.

169. ஆனால் அவளுக்கோ தான் கேட்டது எதுவோ அதை அவள் பெற்றுக் கொண்டாள். ஆமென். மற்ற ஏனையோர்

என்ன கூறினாலும் அது சிறிதளவு வித்தியாசத்தைக் கூட அவளுக்கு ஏற்படுத்தவில்லை; தான் கேட்டதை அவள் பெற்றுக் கொண்டாள்.

170. இப்பொழுது இயேசு அவளிடமாகத் திரும்புகிறார். அவளுடைய சிறு இருதயமானது மிக வேகமாக அடிக்கத் துவங்குகிறது. இப்பொழுது அவர் என்ன கூறப் போகின்றார்? அதோ அவள் அங்கே நிற்கின்றாள், அவளுடைய சுருட்டை மயிரானது அவளுடைய இடுப்பு வரைக்குமாக தொங்கிக் கொண்டிருந்தது, அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துக் கொண்டிருந்தது; அவருடைய பாதங்களுக்கு எண்ணெய் பூசப்பட்ட பிறகு அதற்கு அவள் ஓயாமல் முத்தமிட்டதால் அவளுடைய முகமும் உதடுகளும் எண்ணெயால் வழ வழப்பாக இருந்தன. அவர் என்ன கூறப் போகின்றார் என்று பார்த்துக்கொண்டிருந்த அந்த வீங்கின கண்களும் மற்றும் அவள்

முகம் இருந்த நிலையில் அவள் பார்ப்பதற்கு மிகவும் கோரமாக இருந்திருப்பாள் என்பது நிச்சயம்.

171. அவர், ''நான் அவளுக்குக் கூறுகிறேன், அவளுடைய அதிகக்கணக்கான பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டது" என்றார், அது தான், "அவளுடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டது."

172. அது சொல்லப்பட்டு அதை மாத்திரமே தன் செவியால் கேட்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்! ஓ, அந்த வார்த்தைகள் தான் எனக்கும் தேவைப் படுகிறது! ஏனைய மற்றவர் என்ன கூறினா லும் அதைக்குறித்து எனக்கு அக்கறை யில்லை. அவனுடைய ஸ்தாபனத்தில் நான் நின்று அவர் தான் தேவனுடைய வார்த்தை என்று அறிக்கையிட நான் தயாராக இருக்கின்றேன்! அவர்கள் என்ன கூறினாலும்

அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவர்கள் விரும்பினால் அதன் பேரில் எந்த விதமான அழுக்கை அவர்கள் போடட்டும். மனதின் எண்ணங்களை வசியத்தால் அறிந்து கொள்பவன் என்றும், குறி சொல்பவன் என்றும் கூறட்டும், அல்லது அவர்களால் செய்ய முடிகிறவைகளையெல்லாம் செய்யட்டும். அதைக்குறித்து எனக்கு அக்கறை யில்லை. அவர் பேரில் இருக்கும் நிந்தையை முத்தமிட்டு அகற்ற நான் விரும்புகிறேன். அது அவருடைய வார்த்தையாகும். நிச்சய மாக. அவர் அதை வாக்குத்தத்தம் செய் துள்ளார். அன்றைக்கு அவர் இருந்தது. போல இன்றைக்கும் அதே வார்த்தையாகவே அவர் இருக்கின்றார். அவர் அவ்விதமாகக் கூறி யுள்ளார்.

# இயேசு தம்முடைய எல்லா சந்திப்புத் திட்டங்களையும் காத்துக்கொள்கின்றார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து